விரைவில் வெளிவரும்.

## எழுத்தாளர் துணைவன்
(இரண்டாம் பாகம்)

இதனுள், சொற் குற்றம், சொற்றொடர்க் குற்றம் முதலியன வாராமல் எழுதும் முறை விளக்கப்படும்.

## எழுத்தாளர் துணைவன்
(மூன்றாம் பாகம்)

இதனுள், கடிதம், கட்டுரை, மொழிபெயர்ப்பு, கவிதை எழுதும் முறைகள் விளக்கப்படும்.

விற்பனையாளருக்குத் தக்க கழிவு உண்டு. முன் பணம் அனுப்புக.

கிடைக்குமிடம்:

புலவர், சுந்தர-சண்முகனார்,
பைந்தமிழ்ப் பதிப்பகம்,
புதுச்சேரி.

ணம்மை அச்சகம், புதுச்சேரி

129

# எழுத்தாளர் துணைவன்

## முதல் பாகம்

ஆசிரியர்:
புலவர், சுந்தர-சண்முகனார்

பைந்தமிழ்ப் பதிப்பகம்,
புதுச்சேரி.

# எழுத்தாளர் துணைவன்

## முதல் பாகம்

☆

ஆசிரியர்:

புலவர், சுந்தர - சண்முகனார்

பெடிட் செமினர் கல்லூரி,

புதுச்சேரி.

☆

பைந்தமிழ்ப் பதிப்பகம்,

புதுச்சேரி,

1954

எமது இருபத்து நான்காவது வெளியீடு !

எல்லா உரிமையும் பைந்தமிழ்ப் பதிப்பகத்திற்கே.

விலை ரூ. 1-4-0

# முகவுரை

'எழுத்தாளர் துணைவன்' என்னும் இந்நூலை ஓராண்டுக்கு முன்பே தொடங்கினோம். இங்கே, நினைத்த வாறு தாள் கிடைக்காமை முதலிய வசதிக் குறைவுகளால் இப்பொழுது முதல் பாகம் மட்டுமே வெளிவருகிறது. இந்நூலுள் இரண்டு விதமான தாள்கள் பயன்படுத்தப் பட்டிருப்பதே இதற்குப் போதிய சான்று பகரும்.

இனி விரைவில் அடுத்த பாகங்கள் வெளிவரும். இப்பாகத்தை விட இன்னும் இன்றியமையாதவைகள் அவைகள். முதல் பாகத்திலிருந்து தொடர்ந்து படித்து வந்தாலேயே எளிதில் தக்க பயன் பெறலாம்.

அநுபவத்தின் மேலெழுந்த இந்நூலுக்கு ஆதர வளிக்கக் கோருகிறோம்.

இங்ஙனம்,

| | |
|---|---|
| பைந்தமிழ்ப் பதிப்பகத்தார்கள்<br>நவம்பர், 1954 | சிங்கார. குமரேசன்.<br>சுந்தர. சண்முகன். |

# புணர்ச்சி விதிப் பொருளடக்கம்

[எண்: பக்கத்தின் எண்]


| | | |
|---|---|---|
| 1. | உயிரீற்று விதிகள் | 56 |
| 2. | உயிர் முன் உயிர் வரின் | 58 – 66 |
| 3. | உயிர் முன் மெய் | 66 – 67 |
| 4. | அ ஈற்றில் | 68 – 73 |
| 5. | ஆ ,, | 73 – 76 |
| 6. | இ ,, | 76 – 80 |
| 7. | ஈ ,, | 80 – 81 |
| 8. | உ ,, | 81 – 87 |
| 9. | ஊ, எ, ஏ ,, | 87 – 89 |
| 10. | ஐ ,, | 89 – 92 |
| 11. | ஒ, ஓ, ஔ ,, | 92 – 93 |
| 12. | மெய்யீற்று விதிகள் | 94 |
| 13. | மெய்ம் முன் உயிர் வரின் | 95 – 97 |
| 14. | மெய்ம் முன் மெய் | 98 |
| 15. | ஞ், ண், ந், ம், ன், ஈற்றில் | 98 – 100 |
| 16. | ய், ர், ழ் ,, | 101 – 103 |
| 17. | வ், ல், ள் ,, | 103 – 104 |
| 18. | மெய்யீற்றில் ஒரு பொது விதி | 105 |
| 19. | மிகும் இடங்கள் | 105 – 107 |
| 20. | மிகா இடங்கள் | 107 – 108 |


# எழுத்தாளர் துணைவன்

## எழுத்தாளர்

"வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை" (திருவள்ளுவர்)

"வில்லம்பு விடும் வீரரைப் பகைத்துக் கொள் ளினும் பகைத்துக்கொள்; ஆனால், சொல்லம்பால் சுடும் சூரரை மட்டும் பகைத்துக் கொள்ளாதே" என்பதுதான் மேலுள்ள திருக்குறளின் கருத்து.

சொல்லம்பால் சுடும் சூரர் யார்? அவர்தாம் எழுத்தாளர்.

"சொல்லம்பால் சுடுவதற்கு எழுதத் தெரிய வேண்டியதில்லையே! தண்ணீர்க் குழாயடியிலும், சில குடும்பங்களிலும் பேசும் பெண்களின் சொல் லம்புகளுக்கும், தெருச் சண்டையும் திண்ணைச் சண்டையும் இடும் சில ஆண்களின் சொல்லம்பு கட்கும் எந்த வில்லம்பு நிகராகும்? இவர்கள் எல் லோரும் எழுதவல்ல எழுத்தாளர்களா?" என்று வினவலாம் சிலர்.

இந்த வெட்டிப் பேச்சுக்கள் வெறுக்கத் தக்கவை; அறிஞர்களால் ஒதுக்கத் தக்கவை; ஆத லின், அவற்றைக் கைவிடுவோம்.

அறிஞர்கள் பேச்சுமேடையில் பேசும் சிறந்த பேச்சுக்களுங்கூட, தாளிலோ இசைத் தட்டிலோ பதியப் படாதொழியின், பேசின அப்போதே காற்றில் கலந்து மறைந்துவிடும். கேட்டவர் தவிர, மற்றவர் பயனடைய இயலாது. கேட்டவரும் பின்னர் மறந்துவிடக்கூடும். எழுத்தாளரின் எழுத்தோ, உலகம் உள்ள வரையில் நிலைத்து நின்று பயனளிக்கும்.

திருவள்ளுவர் வாயால் பேசியது இப்போது நமக்குத் தெரியாது. ஆனால், அவர் எழுதிய திருக்குறள் அன்றும் இருந்தது. இரண்டாயிரம் ஆண்டுகள் சென்றும், இன்றும் இருக்கிறது. இனியும் என்றும் இருக்குமன்றோ? எனவே, எழுத்தினுடைய — எழுத்தாளருடைய — மதிப்பே தனி என்பது விளங்குகிறதல்லவா?

ஒருவர் தாம் உரைக்க விரும்பும் அறிவுரையினையோ, அல்லது, தாம் கண்டுபிடித்த கண்டுபிடிப்புக்களையோ உலகினர்க்கு அறிவிக்க வேண்டுமானால் கண்டங் கண்டமாக, நாடு நாடாக, ஊர் ஊராகச்சென்று உணர்த்த முடியுமா? முடியாது. ஆனால், நூலின் வாயிலாகவோ, செய்தித்தாள் வாயிலாகவோ எழுதி வெளியிடுவாராயின், பட்டி தொட்டிகள், சந்துபொந்துகள், மூலை முடுக்குகள் ஆகிய எங்கும் பரவ முடியுமன்றோ? பரவுவதோடு, உலகம் உள்ள வரையும் நிலைத்தும் இருக்குமே!



உலகத்திற்குச் சில பல அரும்பெருங் கருத்துக்களை அள்ளி வழங்கக் கூடிய வாய்ப்பு யாருக்கு வரக்கூடாது? எவர்க்கும் வரலாமே! அதனால் எல்லோரும் எழுத்தாளராகத் திகழவேண்டியது இன்றியமையாதது தானே!

உலகிற்கு ஒன்றும் உணர்த்த வேண்டியதில்லை; உள் நாட்டிலேயே ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைக்குக் குடும்பச் செய்தி பற்றியோ, வாணிகம், அரசியல், சமூகம் முதலியவை பற்றியோ, கடிதமாயினும், அறிக்கையாயினும் எழுதியனுப்ப வேண்டும் என்றே வைத்துக் கொள்வோமே! அதனையாவது முறையாக, ஒழுங்காகப் பிழையின்றி எழுதத் தெரிய வேண்டாமா? பிழையின்றி எழுதுதல் என்றால் எழுதுதற்குரிய இலக்கண விதிப்படி எழுதுதல் ஆகும். எனவே, எழுத்தாளர் இலக்கணத்தை முன்கூட்டி ஒவ்வொருவரும் அறிந்திருந்தால்தானே பிழையின்றி எழுதமுடியும்.

## இலக்கணம் இன்றியமையாததா?

‘இலக்கணவிதி தெரியாமற் போனாலென்ன? பிழையாக எழுதினால்தான் என்ன? ஏறக்குறையக் கருத்தைத் தெரிவித்தால் போதாதா? என்ற வினாக்கள் எழுப்பப்படலாம்.

உலகில் எந்த மொழியினையும் பிழைபடப் பேசுவதாலும் எழுதுவதாலும் உண்டாகும் கேடு (நஷ்டம்) சொல்லுந்தரத்ததன்று. எடுத்துக்

காட்டாக (உதாரணமாக) நம் தென்னிந்திய மொழிகளையே எடுத்துக் கொள்வோம்:

சிலவாயிரம் ஆண்டுகட்கு முன் தென்னிந்தியாவில் ஏதோ ஒரு மொழியே பேசப்பட்டு வந்தது. ஒரே மொழியைப் பேசிய மக்களே, ஒரு மூலைக்கு ஒரு மூலை, அம்மொழியினைப் பல விதமாக இழுத்தும் விழுங்கியும், நீட்டியும் குறுக்கியும், சேர்த்தும் குறைத்தும், மாற்றியும் திருத்தியும் பேசி வந்தனர். இதனால், ஒரேமொழி பலமாறுபாடு அடைய இடமுண்டல்லவா?

அது மட்டு மன்று; ஆங்காங்கு வந்து குடியேறிக் கூடி வாழ்ந்த பிறமொழியாளர்களின் வீதத்திற்கு ஏற்ப, கூடுதல் குறைச்சலாக, மூலைக்கு மூலை பிறமொழிக்கலப்பு ஏற்பட்டதாலும், ஒரே மொழி பல மாறுபாடு அடைய நேரிட்டது.

அது மட்டு மன்று; ஆங்காங்கே படையெடுத்து வந்து வென்று அடக்கியாண்ட பிறமொழியரசர்களின் வீதத்திற்கு ஏற்பவும், அவர்தம் ஆட்சியாண்டுகளின் அளவிற்கு ஏற்பவும், கூடுதல் குறைச்சலாக, ஒரு மூலைக்கு ஒரு மூலை, பிறமொழிக் கலப்பு ஏற்பட்டதாலும், ஒரே மொழி பல்வேறு மாறுபாடு அடைய நேர்ந்தது.

இங்ஙனம் நாளடைவில், ஒரு மொழியினர்க்குள்ளேயே, இம்மூலையில் வாழ்ந்தவர் பேசியது ஒரு விதமாகவும், அம்மூலையில் வாழ்ந்தவர் பேசியது மற்றொரு விதமாகவும் இருந்ததால், இது ஒரு



மொழி போலவும், அது வேறொரு மொழி போலவும் தோன்ற இடமுண்டாயிற்று.

இந்நிலையில், சூழ்நிலையின் காரணமாக, அவ்வொரு மொழி மக்களுக்குள்ளேயே மேலும் பல பிரிவினைகள் ஏற்பட்டுவிட, அவ்வவர் பேசிய பேச்சுக்கள், வெவ்வேறு பெயர்களுடன், வெவ்வேறு மொழிகளாகப் பிரிந்துவிட்டன.

இவ்விதம் பிரிந்தவைகளே தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் என்னும் நான்கு மொழிகளுமாகும். இவற்றுள் ஒவ்வொன்றும் வடமொழி (சமஸ்கிருதம்) கலப்பின் விதத்தால் மாறுபடும். இந்நான்கனுள், மிகக் குறைந்த அளவு கலப்புடையது தமிழ்தான். கலக்காமலேயே, தமிழைப் பேசவும் எழுதவும், வேண்டிய சொற்கள் தமிழிலேயே உள்ளன. மற்றைய மூன்று மொழிகளும், தம்மிடம் உள்ள வடமொழிச் சொற்களை நீக்கிக் கொள்ளுமாயின், மீண்டும் தமிழோடு ஒன்றுபட்ட மொழிகளாக, ஏன் ஒரே மொழிபோல், தோன்றும். இக்கருத்தை மெய்ப்பிப்பதற்காக நான்கிலும் ஒத்துள்ள சில சொற்கள் கீழே தரப்பட்டுள்ளன. ஊன்றி நோக்கின் உண்மை புலனாகும்.

| தமிழ் | தெலுங்கு | கன்னடம் | மலையாளம் |
|---|---|---|---|
| அண்ணன் | அன்ன | அண்ணு | சேட்டன் |
| தம்பி | தம்புடு | தம்ம | அனுசன் |
| மகன் | குமாரடு | மகனு | ஆண்குட்டி |
| மகள் | குமாரத்தி | மகளு | பெண்குட்டி |

| தமிழ் | தெலுங்கு | கன்னடம் | மலையாளம் |
|---|---|---|---|
| பாட்டன் | தாத | தாத | மூப்பன் |
| அக்காள் | அக்க | அக்க | சேட்டச்சி |
| மாமன் | மாம | மாவ | அம்மாவன் |
| எது | எதி | எது | எது |
| அது | அதி | அது | அது |
| இது | இதி | இது | இது |
| சிறிய | சின்ன | சிக்க | சிறிய |
| நெருப்பு | நிப்பு | பெங்கி | தீ |
| மழை | வானெ | மளெ | மழ |
| கொடு | ஈய் | கொடு | கொடு |
| இரவு | ராத்திரி | ரா்த்திரி | ராத்திரி |
| பகல் | பகலு | அகலு | பகல் |
| யார் | எவரு | யாரு | யாரானு |
| ஊர் | ஊரு | ஊரு | ஊரி |
| ஊருக்கு | ஊரிக்கி | ஊரிகே | ஊரிலே |
| சோறு | அன்ன | ஊண்ட | ஊணு |
| சேலை | சீரா | சேலெ | முண்டு |
| கண் | கன்னு | கண்ணு | கண்ணு |
| மூக்கு | முக்கு | மூங்கி | மூக்கு |
| காது | செவ்வு | கிவி | செவி |
| வாய் | நோரு | பாயி | வாயி |
| தலை | தல | தலெ | தலை |
| பசு | ஆவு | அசுவு | பசு |
| எருது | எத்து | எத்து | காள |



மேற் கூறிய சான்றுகளால், இந்நான்கு மொழியினரும் ஒரு காலத்தில் ஒரே மொழியைப் பேசி வந்தனர் என்பது உறுதிப்படுமன்றோ? மற்றும், இப்போது மலையாளம் எனப்படும் பகுதி பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டின் மூவல்லரசுகளுள் ஒன்றான சேர நாடாகத் திகழ்ந்ததும் இங்கே குறிப்பிடத் தக்கதாகும்.

இவ்விதம் இவர்கள் மொழியினால் பிரியாமல் ஓரினத்தவரா யிருந்திருந்தால், தமிழர், தெலுங்கர், (ஆந்திரர்), கன்னடியர், மலையாளிகள் என்ற நால் வகைப்படாமலும், தனித்தனி 'மாபெரும் வட்டம்' (மாகாணம்) கேட்காமலும், ஒரு மொழிப் பெயரினராய், ஒரு மாபெரு வட்டத்தினராகவே இன்று திகழலாமன்றோ? திகழவே, இவ்வட்டத்திய ஒரே மொழி மக்கள் பல கோடியினர் என்ற பெயரும் கிடைக்குமே! தனியொரு நாடாகத் திகழவேண்டிய கட்டாயம் ஏற்படினும் கட்டுக் கோப்பாக இருக்குமே! மொழி பிரிந்ததனாலன்றோ மக்கள் பிரிந்து சென்றனர்! இதனை ஊன்றி நோக்க வேண்டும்.

மொழி பிரிந்ததற்குப் பல காரணங்கள் மேலே கூறப்பட்டிருப்பினும், எல்லாவற்றினும் இன்றியமையாததான மற்றொரு காரணமும் உண்டு. பண்டைய மக்கள் ஒரு குறிப்பிட்ட இலக்கண முறையைப் பின்பற்றாமைதான் அக்காரணமாகும்.

பேச்சு வழக்கில் பின்பற்ற முடியாது போயினும், எழுத்து வழக்கிலாவது ஒரேவிதமான இலக்கணத்தைப் பின்பற்றி ஒரே விதமாக எழுதி

வந்திருப்பார்களே யானால், அப்பழக்கம், பேச்சையும் ஓரளவு கட்டுப்படுத்தி, மொழி பிரிந்து சிதையாமல் இருக்கச் செய்திருக்கு மல்லவா?

உலகம் முழுவதும் பெரும்பாலும் ஒரேவிதமான இலக்கணத்தைப் பின்பற்றி ஆங்கிலத்தை எழுதுவதாலேயே, சீனன் எழுதும் ஆங்கிலத்தை இந்தியனும், இந்தியன் எழுதும் ஆங்கிலத்தை ஐரோப்பியனும் புரிந்து கொள்ளும்படியாக அம்மொழி ஒத்துள்ள தன்றோ? ஐரோப்பியன் எழுதும் ஆங்கிலத்திற்கு 'இங்லீஷ்' என்றும் ஆசியாக்காரன் எழுதும் ஆங்கிலத்திற்கு 'கிங்லீஷ்' என்றும் பெயர் வேறுபாடு இல்லையே!

இம்முறையைப் பண்டு தொட்டு நம் தென்னிந்தியரும் பின்பற்றி வந்திருப்பரேயாயின் நான்கு மொழியினராகவும், இனத்தினராகவும் பிரிய வேண்டியது வந்திராதே!

“போனது போயிற்று, பிள்ளையாரே வாழி” என்று ஏற்றப் பாட்டுப் பாடுவார்கள். அதுபோல், பிரிந்தவர் போக, தமிழர்களாகிய நாமாயினும் இன்னும் நமக்குள்ளேயே பற்பல மொழியினராகப் பிரிந்துவிடா வண்ணம் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது நம் கடமை யல்லவா? அதுதானே அறிவுடைமையுமாகும்!

இன்றைக்குச் சென்னைத் தமிழன் பேசும் தமிழும், திருநெல்வேலித் தமிழன் பேசும் தமிழும், இலங்கைத் தமிழன் பேசும் தமிழும், மலேயாத்



தமிழன் பேசும் தமிழும், தென்னாப்பிரிக்கத் தமிழன் பேசும் தமிழும் ஒன்றுக்கொன்று வேறுபட்டிருப்பதைப் பரக்கக் காண்கிறோம். ஓரிடத்தார் பேசும் தமிழை மற்றோரிடத்தார் கேட்டுப் புரிந்து கொள்வது சிலநேரத்தில் அரிதாயுள்ளது. ஆயினும்; வெவ்வேறிடங்களிலுள்ள இவர்கள் எழுதியுள்ள சில நூற்களைப் படித்துப்பார்ப்போமானால், பெரும்பாலும் நடையில் ஒத்துள்ளன. புரிந்துகொள்ளவும் முடிகிறது. காரணமென்ன? ஒரேவித இலக்கணத்தைப் பின்பற்றி எழுதியதுதானே! எல்லோரும் வெவ்வேறு விதமாகப் பேசுவது போலவே எழுதவும் தொடங்கிவிடின், புரியாமற் போகுமாதலின் ஒவ்வொருவருடைய தமிழும் ஒவ்வொரு வேறு மொழியாக மாறிவிடக் கூடுமன்றோ?

ஆதலின், “பேசுவது போலத்தான், எழுத வேண்டும் இலக்கணம் வேண்டாம்” என்றெல்லாம் கூறுபவர்கள் இக்கருத்துக்களை நுணுகியாராய வேண்டும்.

எடுத்துக் காட்டொன்று வருமாறு:- ஒரு பக்கத்தில் 'வாழ பழம்' என்கிறார்கள் மக்கள்; மற்றொரு பக்கத்தில் 'வால பலம்' என்கிறார்கள். இன்னொரு பக்கத்தில் 'வாய பயம்' என்கின்றனர். வேறொரு பக்கத்தில் 'வாச பசம்' என்கின்றனர். இப்படியே எல்லோரும் எல்லாச் சொற்களையும் வேறு வேறு விதமாக எழுதத் தொடங்கி விடின் நிலைமை என்னவது! யார் புரிந்து கொள்வது?

(மழை, தலை, எருது முதலிய சொற்கள், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்னும் மொழிகளில் சிறு சிறு மாறுதலுடன் இருப்பதை, மேலுள்ள அட்டவணையில் காண்க.) ஆகவே, 'வாழைப்பழம்' என இலக்கண விதிப்படி எல்லோரும் எழுதினால்தானே எல்லோரும் புரிந்து கொள்ளவும், மொழி சிதையாமலும், மக்கள் பிரியாமலும் இருக்கவும் முடியும்.

எனவே, மக்கள் வேற்றுமையின்றி ஒற்றுமையுடன் வாழப் பாடுபட்டுத் தொண்டாற்றிய காந்தியடிகளார் முதலிய அரும்பெருந் தலைவர்களைப் போல, இலக்கணமும் ஒரு வகையில் தொண்டாற்றும் ஆற்றலுடையது என்பது விளங்கும். எனவே மொழிக்கு இலக்கணம் எவ்வளவு இன்றியமையாதது என்பது இப்போது இனிது புலனாகுமே!

அவ்விலக்கண விதிகள், ஏனைய இலக்கண நூற்களில் உள்ளன போலின்றி, புதிய முறையிலே, எளிய வழியிலே, வேண்டிய அளவு இந்நூலுள் விளக்கப்படும். அவ்விதிகளை, புணர்ச்சி விதி, பொது விதி, கட்டுரை விதி, கடித விதி, மொழி பெயர்ப்பு விதி, கவிதை விதி எனப் பல பிரிவுகளாகப் பிரித்துக் கொள்வோம்.

முதலில் எழுத்தின் பெயர் வகைகளையும் சொல்லின் வேறுபாடுகளையும் நினைவு படுத்திக் கொண்டு, பின்னர் விதிகளில் சென்றாலேயே வசதியாயிருக்கும், எளிதில் புரியும். ஏனெனில்



அவற்றைப் பலர் மறந்துவிட்டிருப்பதாகத் தெரிகிறது. அன்றியும், அவ்வகைகளைக் குறிப்பிட்டுச் சொல்லிச் சொல்லியே விதிகளை விளக்க வேண்டியதாயுள்ளது. எனவே, முறைப்படி முதலில் எழுத்தைப் பற்றி ஆய்வோம்.

## எழுத்து

### எழுத்தின் பெயர் வகைகள்

**உயிர் எழுத்து (VOWEL) - 12**

(உயிர்போல் முதன்மை யுடையது உயிரெழுத்து)

**அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ.**

**குற்றெழுத்து (குறில்)-5 அ, இ, உ, எ, ஒ.**

**நெட்டெழுத்து (நெடில்)-7 ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ.**

உயிரெழுத்துக்களுக் குள்ளேயே. குறுகிய, ஓசையுடைய ஐந்தும் '**குறில்**' எனவும், நீண்ட ஓசையுடைய ஏழும் '**நெடில்**' எனவும் பெயர் பெறும். குற்றெழுத்தை ஒலிப்பதற்கு (உச்சரிப்பதற்கு) ஒரு மாத்திரை நேரம் (ஓர் இமைப் பொழுது-கண்ணை மூடித் திறக்கும் நேரம்) ஆகுமென்றால், நெட்டெழுத்தை நீட்டி இழுத்து ஒலிப்பதற்கு இரண்டு மாத்திரை நேரம் ஆகும். இன்னும் உயிரிலேயே, சுட்டெழுத்து, வினாவெழுத்து என்பனவும் உண்டு.

### சுட்டெழுத்து (அ, இ, உ)

அப்பசு, இப்பசு, உப்பசு என்பனவற்றுள் **அ, இ, உ** என்னும் மூன்றும், அந்தப் பசு, இந்தப் பசு, உந்தப் பசு எனக் குறிப்பிட்ட பசுவைச் சுட்டிக் காண்பிக்க உதவுவதால் **'சுட்டெழுத்து'** எனப்படும்.

### வினா எழுத்து (எ)

எப்பசு என்பதில் **'எ'** என்பது, எந்தப் பசு என வினவுகிற (கேள்வி கேட்கிற) பொருளில் வந்திருப்பதால் வினாவெழுத்து எனப்படும். அவனா என்பதன் இறுதியிலுள்ள **'ஆ'** என்பதும், **யா**வை? என்பதன் முதலிலுள்ள **'யா'** என்பதுங் கூட வினாவெழுத்துக்களே.

### ஆய்த எழுத்து

ஃ – என்பது ஆய்த வெழுத்து எனப்படும்.

### மெய் எழுத்து (CONSONANT) - 18

**க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்** - என்பன.

உயிரோடு சேர்ந்து இயங்கும் நம் உடம்பைப் போல, இப்பதினெட்டும் உயிரெழுத்துக்களோடு சேர்ந்து மொழியில் இயங்குவதால் **'மெய் யெழுத்து'** எனப்பட்டன. மெய்=உடம்பு. மெய்யெழுத்து, உடம்பெழுத்து, உடலெழுத்து, ஒற்றெழுத்து ஆகிய எல்லாம் ஒன்றே



இப்பதினெட்டும் ஒரே விதமான ஓசை உடையனவல்ல. ஆறு, எழுத்துக்கள் வன்மையான ஓசையுடனும், ஆறு, மென்மையான ஓசையுடனும், ஆறு இரண்டிற்கும் இடைப்பட்ட ஓசையுடனும் ஒலிக்கப்படும். ஆதலின், ஓசையால் மெய்கள் மூவினப்படும். அவையாவன:—

**க், ச், ட், த், ப், ற்** - வல்லெழுத்து (வலி)–6

**ங், ஞ், ண், ந், ம், ன்** - மெல்லெழுத்து (மெலி)–6

**ய், ர், ல், வ், ழ், ள்** - இடையெழுத்து (இடை)–6

இம் மெய்யெழுத்துக்களை அரை மாத்திரையளவே ஒலிக்கவேண்டும்.

### உயிர்மெய் எழுத்து -216

நாம் உயிரும் உடம்பும் சேர்ந்திருப்பதால் 'மனிதர்' என்று பெயர் பெற்றிருப்பதைப் போல, உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் சேர்வதால் உண்டாகும் எழுத்து (க்+அ=க) **'உயிர்மெய்'** எழுத்து எனப்படும். **'க்'** என்பது மெய். **'அ'** என்பது உயிர். இரண்டும் சேர, **'க'** என்பது உண்டாவதால், அது **'உயிர்மெய்'** எழுத்து எனப்படும். எனவே, தமிழெழுத்து அட்டையில், **'க'** முதல் **'னௌ'** வரையிலும் காணப்படுகின்ற 216 எழுத்துக்களும் உயிர்மெய் யெழுத்துக்கள் என அறிக.

உயிரும் மெய்யும் சேர்வதால் உயிர்மெய் எழுத்து உண்டாயினும் மெய்யெழுத்துக் குரிய

அரைமாத்திரை சேராமல், உயிருக்குரியமாத்திரை மட்டுமே உயிர்மெய் யெழுத்துக்குக் கொடுக்கப் படும். எனவே, க, செ, மொ போன்ற உயிர்மெய்க் குறிலுக்கு ஒரு மாத்திரையும், கா, சே, மோ போன்ற உயிர்மெய் நெடிலுக்கு இரண்டு மாத்திரையும் கொடுத்து ஒலிக்கவேண்டும்.

## குற்றியலுகரம்

எழுத்தின் இனத்தைச் சேர்ந்த **குற்றியலுகரம்** என்பதைப்பற்றித் தெரிந்து கொள்ளவேண்டியது, பிழையில்லாமல் எழுத உதவுகின்ற புணர்ச்சி விதிக்கு மிக இன்றியமையாத தாகும். அது வருமாறு:—

'உ' என்னும் குற்றெழுத்துக்கு ஒரு மாத்திரை தரவேண்டும் என்பது நமக்கு முன்பே தெரியும். இந்த 'உ' சில இடங்களில் ஒரு மாத்திரையினின் றும் குன்றி (குறைந்து) அரைமாத்திரையே பெறும். அந்தக் குன்றிய ஓசையை உடைய 'உ' குற்றியலுகரம் எனப்படும். அஃதாவது, குன்று+இயல்+உகரம்=குன்றியலுகரம் குன்று=(மாத்திரை) குறைந்த, இயல்=தன்மையுடைய, உகரம்=உ. என்பது பொருள். அகரம் என்றால் அ. உகரம் என்றால் உ.) குன்றியலுகரம் என்பதி லுள்ள 'ன்' என்பது 'ற்' எனத் திரிந்து '**குற்றியலுகரம்**' என்றாயிற்று. இதனைக் '**குற்றுகரம்**' எனவும் கூறலாம். இனி உகரம் (உ) எந்த எந்த இடத்தில் அரை



மாத்திரை குறைந்து குற்றியலுகரமாக வரும் என ஆராய்வோம்:

க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறு வல்லின மெய்யெழுத்துக்களோடு 'உ' என்னும் உயிரெழுத் துச்சேர்ந்தால் (க்+உ, ச்+உ, ட்+உ, த்+உ, ப்+உ ற்+உ) கு, சு, டு, து, பு, று என்னும் வல்லின உயிர் மெய் யெழுத்துக்கள் தோன்றும். இவற்றை, கு-சு-டு-து-பு-று — எனத் தனித்தனியாக ஒலப்போமானால் ஒரு மாத்திரை பெறும். **பங்கு, பஞ்சு, பட்டு, பத்து, சால்பு, கன்று** எனப் பதத்தின் இறுதியில் வரும் பொழுது, **கு, சு, டு, து, பு, று** என்பவற்றை மேலோடு ஒலிக்கின்றோ மாதலால், இங்கெல்லாம் இவை ஒரு மாத்திரை பெறாமல், அரை மாத்திரை குறைந்து, அரை மாத்திரையே பெறும். இப்பதங் களை நாம் ஒலித்துப் பார்ப்போமானால், நமக்கு உண்மை புலனாகும். * இக் குற்றியலுகரம் நெடில் தொடர், உயிர்த்தொடர், ஆய்தத்தொடர், வன்றொடர், மென்றொடர், இடைத்தொடர் என ஆறு வகைப்படும். அவையாவன:—

### (1) நெடில் தொடர்க் குற்றியலுகரம்

'**நாடு**' என்னும் சொல்லின் இறுதியிலுள்ள '**டு**' என்பதிலுள்ள (ட்+உ) 'உ' குற்றுகரம். இந்த

---

* கு, சு, டு, து, பு, று என்னும் ஆறில் முடிபவையே குற்றிய லுகரச் சொல்லாகும். இருமு, கதவு என மு, வு முதலியவற் றில் முடிபவை குற்றியலுகரமாகா.

'டு' எழுத்து 'நா' என்னும் தனி நெட்டெழுத்தைத் தொடர்ந்து வந்திருப்பதால் இதனை நெடில் தொடர்க் குற்றியலுகரம் என்பர். ஆடு, சோறு முதலியனவும் இன்னவையே. இரண்டே எழுத்துக்களையுடைய பதங்களில் வருவதே நெடில் தொடர்க் குற்றுகரமாகும். முதலில் ஏதாவதொரு நெட்டெழுத்தும் பின் கு, சு, டு, து, பு, று என்பவற்றில் ஏதாவதொன்றும் இருக்கும். இராது, நில்லாது என இரண்டிற்கு மேற்பட்ட எழுத்துக்களைத் தொடர்பவை ரா, லா என்னும் நெட்டெழுத்துக்களின் பின் இருப்பினும் நெடில்தொடராகா.

**(2) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்**

**'இராது'** என்பதை உயிர்த் தொடர்க் குற்றுகரமாகச் சொல்லவேண்டும். 'து' வுக்கு முன் உள்ளது 'ரா' அதைப் பிரித்தால் ர்+ஆ என இருக்கும். இவ்விரண்டில் 'ஆ' தான் இறுதியிலுள்ளது. எனவே, ஆ என்னும் உயிரெழுத்தைத் தொடர்ந்து 'து' வந்திருப்பதால் இது உயிர்த்தொடர்க் குற்றியலுகரமாகும். வரகு (வர்+அகு), பெரிது (பெர்+இது) முதலியவும் இக் குற்றுகரமே.

**(3) ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்**

**அஃது, எஃகு** என்னும் சொற்களில் ஃ என்னும் ஆய்த எழுத்தைத் தொடர்ந்து **து, கு** என்பவை வந்திருப்பதால், இவைஆய்தத் தொடர்க் குற்றுகரமாகும்.



**(4) வன்றொடர்க் குற்றியலுகரம்.**

**சுக்கு, கச்சு, விற்று,** என்பவற்றுள், **க், ச், ற்** என்னும் வல்லின மெய்களைத் தொடர்ந்து **கு, சு, று** என்பவை வந்திருப்பதால் இவை வன்றொடராகும்.

**(5) மென்றொடர்க் குற்றியலுகரம்.**

**பங்கு, வண்டு, பந்து,** என்பவற்றுள், **ங், ண், ந்,** என்னும் மெல்லின மெய்களைத் தொடர்ந்து **கு, டு, து** வந்திருப்பதால், இவை மென்றொடராகும்.

**(6) இடைத்தொடர்க் குற்றியலுகரம்**

**எய்து, சால்பு, சார்பு** என்பவற்றுள் **ய், ல், ர்,** என்னும் இடையின மெய்களைத் தொடர்ந்து **து, பு** வந்திருப்பதால், இவை இடைத்தொடராகும்.

## முற்றியலுகரம்

அரை மாத்திரை குன்றியதைக் குற்றியலுகரம் என்றோம். முழு மாத்திரை முற்றி (நிறைந்து) இருப்பது முற்றியலுகரமாம். அஃதாவது: **ங், ஞ், ண், ந், ம், ன்** என்னும் மெல்லின மெய்யின்மேலும், **ய், ர், ல், வ், ழ், ள்** என்னும் இடையின மெய்யின் மேலும் 'உ' ஏறியுள்ள **ஙு, ஞு, ணு, நு, மு, னு—யு, ரு, லு, வு, ழு, ளு,** என்னும் எழுத்துக்கள் பதங்களின் இறுதியில் அமைந்திருப்பதாம். (இவற்றுள் பல எழுத்துக்கள் மொழிக்கு இறுதியில் வருவதில்லை.)

**இருமு, கதவு,** முதலியவற்றின் இறுதியிலுள்ள **மு, வு** போன்றவை முற்றியலுகரங்களாம்.

**கு, சு, டு, து, பு, று** என்பவையும், **நகு, பசு, வடு, அது, மறு** எனத் தனிக் குற்றெழுத்தின் பின் வந்தால் முற்றியலுகரமாகவே கருதப்படும்.

மேற் கூறப்பட்டுள்ள முற்றியலுகரங்கட்கு ஒரு மாத்திரை தந்து ஒலிக்கலாம்.

இதுவரையும் எழுத்தின்வகைகள், பெயர்கள், மாத்திரைகள்என்பவற்றைக் கூறினோம். இவற்றை நன்கு நினைவில் இருத்திக்கொள்ள வேண்டும். இனி முறையே, எழுத்தாலானசொல்லுக்குச்செல்வோம்.

## சொல் (WORD)

### பகாப்பதம்.

சொல் என்றாலும் பதம் என்றாலும் ஒன்றே. **‘மரம்’, ‘குதிரை’** முதலிய சொற்களைப் பகுக்க (பிரிக்க) முடியாது. ஆதலின், இவை போன்றவை **‘பகாப்பதம்’** எனப்படும்.

### பகுபதம்.

**கூனன், கூனி, உண்டான்** முதலிய சொற்களைப் பகுக்க முடியும். ஆதலின், இவை போன்றவை **‘பகுபதம்’** எனப்படும்.



**கூன் + அன் = கூனன், கூன் + இ = கூனி, உண் + ட் + ஆன் = உண்டான்.**

உண்டான் என்பதில், முதலிலுள்ள **‘உண்’** என்னும் பகுதி தொழிலையும், இறுதியிலுள்ள **‘ஆன்’** என்னும் விகுதி உயர்திணை ஆண் ஒருமையையும், இடையிலுள்ள **‘ட்’** என்னும் இடைநிலை இறந்த காலத்தையும் அறிவிப்பது காண்க.

இன்னும் **படி + த் + த் + அன் + அன் = படித்தனன்** என, பகுதிக்குப் பின் **‘த்’** சந்தியும், **‘அன்’** விகுதிக்கு முன் மற்றோர் **‘அன்’** சாரியையும் வந்திருப்பதை நோக்குக.

மடிந்தனன் என, பகுதிக்குப் பின் **‘த்’** என்னும் சந்தி **‘ந்’** என விகாரப்படுவதும் (திரிவதும்) உண்டு. இங்ஙனம், பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்பவை, பதத்திற் கேற்றாற்போல் கூடுதல் குறைச்சலாக வரும்.

## சொல் வகை

பகுக்கப்பட்டோ, பகுக்கப் படாமலோ நிற்கும் சொற்களைப் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகையாகப் பிரித்துள்ளனர் இலக்கண நூலார்.

**எ. கா.** (எடுத்துக் காட்டு) வருமாறு:—

1.) பெயர்ச்சொல்: **கந்தன், பசு, வீடு,** முதலியன பெயர்களைக் குறிக்கும் சொற்கள்.

2.) வினைச்சொல்: **வந்தான், படித்தான், ஓடினன்** முதலியன வினைகளைக் குறிக்கும் சொற்கள் (வினை=தொழில்)

3.) இடைச்சொற்கள்: தனியாகப் பொருள் தராமல், பெயர் வினையை அடுத்து வருகின்றன ஏ, ஓ. முதலிய அசைகள், சாரியைகள், வேற்றுமை உருபுகள் முதலியன.

4.) உரிச்சொல்: பெயர், வினைக்கு உரிய சில சொற்கள். உரிச்சொல் இங்கு வேண்டியதில்லை. ஒருவகையில் இச்சொற்களைப் பெயர், அல்லது வினையாகக் கூறிவிடலாம்.

இனி, மிக இன்றியமையாத பெயர், வினைகளைப் பற்றி ஆராய்வோம்.

## பெயர்ச்சொல் (NOUN)

பொருள்களின் பெயர்களைக் குறிக்கும் சொற்கள் **பெயர்ச்சொற்கள்** எனப்படும். இப்பெயர்ச் சொற்களைப் பற்பல வகைப் படுத்துவதுண்டு. **பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில்,** என ஆறுகப் பிரிப்பது ஒரு முறை. அவையாவன:—

1. பொருட் பெயர்: **மனிதன், மாடு** முதலியன.
2. இடப் பெயர்: **வீடு, காடு** முதலியன.



3. காலப் பெயர்: **ஆவணி, இரவு** முதலியன.
4. சினைப்பெயர்: **கண், கால், உச்சி** முதலியன.
5. குணம் அல்லது பண்புப்பெயர்: **கருமை, சிறுமை, நன்மை, இனிமை** முதலியன.
6. தொழில் பெயர்: **ஆட்டம், ஓட்டம்** முதலியன.

### வினையாலணையும் பெயர்.

**ஆட்டம், ஓட்டம்** முதலியன, **ஆடுதல், ஓடுதல்** என்னும் தொழில்களைக் குறிக்கும் சொற்களாம். இத் தொழில்களைச் செய்தவர்க்கு, இத்தொழில்களின் மூலமாக வைக்கப்படும் பெயர்கள் **வினையால் அணையும் பெயர்** எனப்படும். (வினையால் அணைதல்= தொழிலால் உண்டாதல்)

(எ – கா.) நடனம் **ஆடியவன்** நல்லவன்.
முதலில் **ஓடியவன்** வென்றான்.

மேலேயுள்ள **ஆடியவன், ஓடியவன்** என்னும் பெயர்கள் வினையாலணையும் பெயர்களாம். **ஓதுவார், கற்றோர்** முதலிய பெயர்களும் இன்னவையே.

### ஆகுபெயர்.

பெயர்களுள் **ஆகுபெயர்** என்ற வகையும் உண்டு. 'திருச்சியே திரண்டு சென்றது' என்பதில், திருச்சி என்னும் இடப் பெயர், இங்கே இடத்தைக் குறிக்காமல், அவ்விடத்தில் வாழும் மக்களுக்கு ஆகி வந்ததனால், **ஆகுபெயர்** எனப்படும். மற்றொன்றிற்கு ஆகிவரும் பெயர் **ஆகுபெயர்** ஆகும். '**காளை வந்தான்**' என்பதில், ஆண் மாட்டிற்குரிய காளை

என்னும் பெயர், இங்கே அதைக் குறிக்காமல், காளை போன்ற இளைய வீரனுக்கு ஆகிவந்தது. இது போன்றவை யெல்லாம் ஆகு பெயரே.

இன்னும் **திணை, பால், எண், இடம்** என்பவற்றுளும் பெயர்கள் பலவகைப் படுவதுண்டு. அவையாவன:

**திணை – 2**

1. உயர்திணைப்பெயர்: **இறைவன், அரசன், முனியன்** என, உலகில் உயர்ந்த இனமான தேவரையும் மனிதரையும் குறிக்கும் பெயர்கள். (திணை = இனம்)

2. அஃறிணைப் பெயர்: **மாடு, மரம், கல்** என உயர்திணை யல்லாத மற்றைய உயிருள்ள பொருள்களையும் உயிரில்லாத பொருள்களையும் குறிக்கும் பெயர்கள். அல்+திணை = அஃறிணை = உயர்திணை அல்லாத திணை.

**பால் (GENDER) – 5**

1. ஆண்பால்: **கந்தன், முருகன்** என உயர்திணையில் ஓர் ஆணைக் குறிக்கும் பெயர்.

2. பெண்பால்: **மங்கை, அழகி** என உயர்திணையில் ஒரு பெண்ணைக் குறிக்கும் பெயர்.

3. பலர்பால்: **ஆடவர், பெண்டிர், மக்கள், ஊரார்** என உயர்திணையில் பல ஆண்களையும் பெண்களையும் குறிப்பவை.

4. ஒன்றன்பால்: **குதிரை, அது, தென்னை** என அஃறிணையில் ஒன்றைக் குறிக்கும் பெயர்.



5. பலவின் பால்: **குதிரைகள், அவை, தென்னைகள்** என அஃறிணையில் ஒன்றிற்கு மேற்பட்ட பலவற்றைக் குறிக்கும் பெயர்கள்.

முன் மூன்று பால்களும் உயர்திணைக்கும், பின் இரண்டு பால்களும் அஃறிணைக்கும் உரியன.

**எண் (NUMBER) – 2**

1. **ஒருமைப் பெயர்:** தொழிலாளி, புலி என இரு திணைகளிலும் எண்ணிக்கையில் ஒருபொருளைக் குறிக்கும் பெயர் ஒருமைப் பெயர் ஆகும்.

2. **பன்மைப் பெயர்:** தொழிலாளிகள், புலிகள் என இரு திணைகளிலும் எண்ணிக்கையில் ஒன்றுக்கு மேற்பட்ட பல பொருள்களைக் குறிப்பவை பன்மைப் பெயர் ஆகும்.

**இடம் (PERSON) – 3**

இது **தன்மை, முன்னிலை, படர்க்கை** என மூவகைப் படும். இவற்றுள் ஒவ்வொன்றும் ஒருமை, பன்மை என இரு வகைப்படும்.

1. **தன்மை (Ist Person)** பேசுவன் தன்னையே சுட்டிக்கொள்ளும் பெயர் தன்மைப் பெயராகும்.

யான், நான் – தன்மை ஒருமைப் பெயர்கள்.

யாம், யாங்கள், நாம், நாங்கள் - தன்மைப் பன்மை.

2. **முன்னிலை (2nd Person):** பேசுபவன் தனக்கு முன்னால் நிற்பவரைக் குறிக்கும் பெயர் முன்னிலைப் பெயர்.

நீ – முன்னிலை ஒருமைப் பெயர்.

நீர், நீவிர், நீங்கள் – முன்னிலைப் பன்மை.

**3. படர்க்கை (3rd Person):** பேசுபவரையும் முன்னிற்பவரையும் குறிக்காமல், அப்பால் இருக்கும் மூன்றாவது பொருளிடம் படர்ந்து செல்லும் பெயர் படர்க்கைப்பெயராகும். (அப்பால் படர்வது படர்க்கை)

அவன்–கந்தன், அவள்–கமலி, அது–அணில் என ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் என்னும் முப்பால்களைக் குறிப்பவையெல்லாம் படர்க்கை ஒருமைப் பெயர்களாம்.

அவர்கள் – மனிதர்கள், அவை – மரங்கள் எனப் பலர்பால், பலவின்பால் என்னும் இரு பால்களைக் குறிப்பவை யெல்லாம் படர்க்கைப் பன்மைப் பெயர்களாகும்.

### நாம், நாங்கள்

பலர் சேர்ந்தாற்போல, 'நாம் செல்வோம்,' 'நாங்கள் செல்வோம்' என்று கூறும்போது, நாம், நாங்கள் என்னும் இரண்டும் தன்மைப் பன்மையைக் (பேசுபவரைக்) குறிக்கும். ஆதலின் இவற்றைத் 'தன்மைப் பன்மைப் பெயர்கள்' என்று முன்னர்க் குறித்தோம். இவை இன்னும் முன்னிலையையோ, படர்க்கையையோ சேர்த்துக் குறிப்பதும் உண்டு.



**கோபாலா நாம் இருவரும் கடைக்குச் செல்லலாமா?** என்ற தொடரில், **நாம்** என்பது பேசுபவரையும் முன்னிலையாகிய கோபாலனையும் குறிக்கின்றதன்றோ?

**கோபாலா, கண்ணன் வந்ததும், நாம் மூவரும் திருவிழாவுக்குச் செல்லலாமா?** என்ற தொடரில், **நாம்** என்பது பேசுபவர், முன்னிலையாகிய கோபாலன், படர்க்கையாகிய கண்ணன் என்னும் மூவரையும் குறிக்கின்றதன்றோ? எனவே, **நாம்** என்பது மூவிடங்களையும் குறிப்பதுணர்க.

**கோபாலா, கண்ணன் வந்ததும் நாங்கள் இருவரும் கடைக்குச் செலவோம்** என்பதில், **நாங்கள்** என்பது முன்னிலையாகிய கோபாலனை விலக்கி, தன்மையையும் படர்க்கையையும் குறிக்கின்றது. இது முன்னிலையைக் குறிப்பதில்லை.

எனவே, **நாம், நாங்கள்** என்னும் பெயர்களை இடமறிந்து பயன்படுத்துவது எழுத்தாளர் கடமையாகும். இனி, பெயரின் பொருளை வேறுபடுத்தும் வேற்றுமைக்குச் செல்வோம்.

## வேற்றுமை (CASE)

**வேலன்** என்பது ஒரு மனிதனது பெயரைக் குறிக்கின்றது. தொடர்களில் (வாக்கியங்களில்) பல வகை உருவங்களில் இப்பெயரை அமைக்க முடியும். அவையாவன:—

1) **வேலன்** காலையில் எழுந்தான் **(முதல் வேற்றுமை)**

2) கந்தன் **வேலனை** அடித்தான் **(இரண்டாம் வேற்றுமை)**

3) **வேலனால்** காரியம் கை கூடிற்று
நான் **வேலனோடு** சென்றேன் } **மூன்றாம் வேற்றுமை**

4) நான் **வேலனுக்குப்** பணம் தந்தேன் { **நான்காம் வேற்றுமை.**

5) அ) **வேலனின்** (வேலனினின்றும்) விந்தன் பிரிந்தான்.
ஆ) **வேலனின்** (வேலனை விட) விநாயகன் பெரியவன்.
இ) **வேலனின்** (வேலனைப்போல) நீலனும் நல்லவன். } **ஐந்தாம் வேற்றுமை**

6) **வேலனது** வீடு பெரியது **(ஆறாம் வேற்றுமை)**

7) **வேலன் கண்ணே** (வேலனிடம்) என் நகை உள்ளது. **(ஏழாம் வேற்றுமை)**

8) **வேலா,** வேலையைச் செய் **(எட்டாம் வேற்றுமை)**

**வேலன்** என்னும் தனிப் பெயர்ச்சொல், **ஒரு மனிதன்** என்ற பொருளை (அர்த்தத்தை) குறிக்கும். இப்பெயரோடு, வேலனை, வேலனால், வேலனுக்கு என **ஐ, ஆல், கு** முதலியவற்றைச் சேர்த்தால், பெயரின் பொருள் பலவிதமாக வேறுபடுகின்றதல்லவா? அஃதாவது: **வேலன் அடித்தான்** என்றால், வேலன் அடிக்கும் வன்மை யுடையவன் என்பதும், **வேலனை அடித்தான்** என்றால், வேலன் அடிபடுபவன்



என்பதும் புலப்படும். **வேலன் கொடுத்தான்** என்றால் வேலன் கொடையாளி என்பதும், **வேலனுக்குக் கொடுத்தான்** என்றால், வேலன் பிறரிடம் வாங்குபவன் என்பதும் விளங்கும். இவ்விதம் **ஐ, ஆல், கு** முதலியவை வரின், பெயரின் பொருள் பலவகையில் வேற்றுமையுறுகிறதன்றோ? இவ்வேற்றுமையைச் செய்கின்ற அந்த **ஐ, ஆல், கு** முதலியவற்றிற்கு **வேற்றுமை** என்ற பெயரையே வைத்து விட்டார்கள். இவ் வேற்றுமைகளை ஒன்று முதல் எட்டுவரை எண்ணிட்டு, எட்டு வேற்றுமைகளாகப் பிரித்துள்ளனர். **ஐ** என்பது இரண்டாம் வேற்றுமையையும், **ஆல்** என்பது மூன்றாம் வேற்றுமையையும், இப்படியே மற்றவை மற்ற வேற்றுமைகளையும் குறிக்கின்ற உருவங்களாக இருத்தலின், இந்த **ஐ, ஆல், கு** முதலியவற்றிற்கு **வேற்றுமை உருபுகள்** (உருபு – உருவு – உருவம்) என்று பெயர் வைத்துள்ளனர்.

எனவே, **வேற்றுமைகள்** எனப்படுபவை, வேற்றுமையையறிவிக்கின்ற அடையாள உருவங்களாகிய, உருபுகளேயாம். இவை பெயர்ச்சொற்களின் பின்னேயே வரும். இனி ஒவ்வொரு வேற்றுமையினையும் சிறிது சிறப்பாக நோக்குவோம்.

## முதல் வேற்றுமை
## (THE NOMINATIVE CASE)

பெயரின் இறுதியில் உருபு இருக்கும் என்றோம். ஆனால், முதல் வேற்றுமையில் மட்டும் எந்த

உருபும் இராது, இயற்கையான பெயர் மட்டுமே இருக்கும். இதற்குப் பெயரையே உருபாக எண்ணிக் கொள்க.

(எ. கா.) **வேலன் எழுந்தான்.** எழுந்தது யார்? என்ற கேள்வியின் பதில் (வேலன்) முதல் வேற்றுமையாகும். எழுதல் என்னும் தொழிலுக்கு முதல்வன் (கருத்தா) வேலன். எனவே, முதல் வேற்றுமை முதன்மை (கருத்தா) பொருளில் வருவதறிக. முதன்மையை **எழுவாய்** என்றும் கூறுவர் எனவே. இதற்கு **எழுவாய் வேற்றுமை** என்ற பெயரும் உண்டு.

## இரண்டாம் வேற்றுமை

## (THE ACCUSATIVE CASE)

**கந்தன் வேலனை அடித்தான்.** வேலனை என்பதன் இறுதியிலுள்ள **ஐ** இரண்டாம் வேற்றுமை உருபாகும். யாரை அடித்தான்? என்ற கேள்விக்குக் கிடைக்கும் பதில் (வேலனை) இரண்டாம் வேற்றுமையாம். அடித்தல் என்னும் தொழிலைச் செய்தவன் கந்தன், செய்யப்பட்டவன் (அடிக்கப்பட்டவன்) வேலன். எனவே, இவ் வேற்றுமை செயப்படு பொருளில் வருவதுணர்க.

## மூன்றாம் வேற்றுமை

## (BY AND WITH)

(அ) **வேலனால் காரியம் கைகூடியது** — வேலன் — ஆல். **ஆல்** மூன்றாம் வேற்றுமை உருபு. **வேலனான் கைகூடியது** என **ஆன்** என்பதும் மூன்றாம்



வேற்றுமையுருபாக வரும். யாரால்? என்ற கேள்வியின்பதில்(வேலனால்)மூன்றாம் வேற்றுமையாம். காரியம் கைகூடுவதற்கு வேலன் ஒரு கருவியாக இருந்ததால், மூன்றாம் வேற்றுமையின் **ஆல், ஆன்** உருபுகள் கருவிப் பொருளில் வருவதறிக. இவ்வேற்றுமையில் இன்றொரு வகையும் உண்டு. அஃதாவது:—

(ஆ) **'நான் வேலனோடு சென்றேன்'** —வேலன்—ஓடு- **ஓடு** மூன்றாம் வேற்றுமை உருபு. வேலனொடு, வேலனுடன், என **ஒடு, உடன்** என்பனவும் இவ்வுருபுகளேயாம். யாரோடு? (யாருடன்?) என்னும் கேள்வியின் பதில் (வேலனொடு) இவ்வேற்றுமையாம். எனது செல்லல் தொழில் வேலனுடன் நிகழ்ந்ததால், இம்மூன்று உருபுகளும் **உடனிகழ்ச்சிப்** பொருளில் வரும் என்றறியலாம்.

எனவே, மூன்றாம் வேற்றுமை உருபுகளுள் ஆல், ஆன் என்பன கருவிப் பொருளிலும், ஓடு, ஒடு, உடன் என்பன உடனிகழ்ச்சிப் பொருளிலும் வருமென்றுணர்க.

## நான்காம் வேற்றுமை

## (THE DATIVE CASE)

**நான் வேலனுக்குக் கொடுத்தேன்** — வேலனுக்கு — கு நான்காம் வேற்றுமை யுருபாகும். யாருக்கு? என்னும் கேள்வியின் பதில் (வேலனுக்கு) இவ் வேற்றுமையாம். வேலன் [illegible]

பொருளைக் கொள்ளுவதால், இவ்வேற்றுமை **கொள்ளுதல் பொருளில்** வருவதறிக.

## ஐந்தாம் வேற்றுமை.
## (FROM, THAN AND LIKE)

இன், இல் என்பன ஐந்தாம் வேற்றுமை உருபுகள். இவ் வேற்றுமை மூன்று பொருள்களில் வரும்.

(அ) **வேலனின் விந்தன் பிரிந்தான்** — யாரினின்றும் பிரிந்தான்? எனனும் கேள்வியின் பதில் ஐந்தாம் வேற்றுமை **நீக்கப்பொருள்** ஆகும். வேலனிடமிருந்து, வேலனினின்று என இருந்து, நின்று என்பனவும் நீக்கப் பொருள் உருபாக வரும்.

(ஆ) **வேலனின் விநாயகன் பெரியவன்**—யாரினும்? யாரைவிட? என்னும் கேள்வியின் பதிலாய், மற்றொன்றை அளப்பதற்குரிய ஓர் அளவுப் பொருளாய் அமைவது ஐந்தாம் வேற்றுமை **எல்லைப் பொருள்** ஆகும். (எல்லை = அளவு) இரு பொருள்களுக்குள், ஒன்றன் உருவம் வயது, சிறுமை பெருமை, நன்மை தீமை, தூரம் திசை முதலியவற்றை அளப்பதற்கு மற்றொன்று அளவு கோலாயிருப்பது அளவுப் பொருளாம்.

(இ) **வேலனின் நீலனும் நல்லவன்** — யாரின்? (யாரைப்போல?) என்னும் கேள்வியின் பதிலாகக் கிடைப்பது ஐந்தாம் வேற்றுமை **ஒப்புப் பொருள்** ஆகும். இங்கே, நீலனுக்கு வேலன் ஒப்பாக்கப் பட்டுள்ளதை நோக்குக.



## ஆறும் வேற்றுமை
## (THE POSSESSIVE CASE)

**வேலனது வீடு பெரியது** - வேலனது — **அது** ஆறும் வேற்றுமை உருபாகும். வேலனுடைய என, உடைய என்னும் உருபும் இதற்கு உண்டு. வீடு வேலனது உரிமையாதலால், ஆறும் வேற்றுமை **கிழமைப் பொருள்** உடையதாகும். (கிழமை=உரிமை)

## ஏழாம் வேற்றுமை
## (THE LOCATIVE CASC)

**வேலன்கண்** (வேலனிடம்) என் பொருள் உள்ளது - கண், இடம், இல், மேல் முதலியன ஏழாம் வேற்றுமை உருபுகளாம். இந்த உருபுகளை இடத்திற்கு ஏற்பப் பயன் படுத்த வேண்டும். பொருள் இருப்பதற்கு உரிய இடமாக வேலன் இருப்பதால், இவ்வேற்றுமை **இடப்பொருள்** உடையதென்றறிக. யாரிடம் உள்ளது? என்னும் கேள்வியின் பதில் இவ்வேற்றுமையாம்.

## எட்டாம் வேற்றுமை
## (THE VOCATIVE CASE)

**வேலா, இங்கே வா — வேலா** என விளிக்கும் பொருளில் வருவது விளிவேற்றுமை அல்லது எட்டாம் வேற்றுமையாகும். (விளித்தல் = அழைத்தல்.) இவ் வேற்றுமைக்கும் தனி உருபு இல்லை. வேல, வேலா, வேலனே என, ஓர் எழுத்துக் குறைவதும், ஒரெழுத்து மற்றோரெழுத்தாக மாறுவதும், புதிதோர் எழுத்து வந்து சேர்வதும்

போன்ற சொல் பகுதிகளை இவ் வேற்றுமையின் உருபுகளாம். அருகில் இருப்பவரை அழைக்கும் போது ஒரு மாறுதலும் இன்றி, **வேலன், இதை வாங்கிக் கொள்** என இயற்கையாக அழைப்பதும் உண்டு.

மேலே காட்டிய வேற்றுமைகளில், **வேலன்,** என்னும் பெயரை வேற்றுமைப்படுத்தினோம். இது போலவே, வேறு எந்த உயர்திணைப் பெயரும், எந்த அஃறிணைப் பெயரும் வேற்றுமை உருபுகளை ஏற்கும்.

இதுவரையும் பெயர்ச்சொல்லைப் பற்றி ஆராய்ந்தோம்; இனி வினைச்சொல்லுக்குச் செல்வோம்.

குறிப்பு:— இவ் வேற்றுமைகளைக் குறிப்பிட்டுப் பின் [illegible] இவற்றை நன்கு [illegible].

## வினைச்சொல் (VERB)

வினை = தொழில், பொருள்கள் செய்யும் தொழிலைக் குறிக்கும் சொல் **வினைச்சொல்** எனப்படும். வினைச்சொல் காலம் காட்டும்.

### காலம் (TENSE)

காலம் = நேரம் அல்லது பொழுது. காலம் மூன்று வகைப்படும். அவையாவன:—

### 1. இறந்தகாலம் (PAST TENSE)

தொழில் முன்பே நடந்து (இறந்து) போனதைக் குறிப்பது. (எ — கா): செய்தான். (செய்+த்+ஆன்), உண்டான் (உண்+ட்+ஆன்), தின்றான் (தின்+ற்+ஆன்), ஓடினான் (ஓடு+இன்+ஆன்) என்னும் இவற்றில் இடையில், த், ட், ற், இன் என்னும் இடைநிலைகள் வந்து இறந்த காலம் காட்டுகின்றன.

### 2. நிகழ் காலம் (PRESENT TENSE)

தொழில் இப்பொழுது நிகழ்ந்து கொண்டு இருப்பதைக் குறிப்பது. செய்கிறான் (செய்+கிறு+ஆன்), செய்கின்றான். (செய்+கின்று+ஆன்) என, **கிறு, கின்று** இடைநிலைகள் நிகழ்காலம் காட்டுகின்றன.

### எதிர் காலம் (FUTURE TENSE)

தொழில் இனி எதிரே நிகழப் போவதைக் குறிப்பது. உண்பான் (உண்+ப்+ஆன்), செய்வான் (செய்+வ்+ஆன்) என, **ப், வ்** இடைநிலைகள் எதிர் காலம் காட்டுகின்றன. இம் முக்கால வினைச் சொற்களையும் உணர்க.

### தெரிநிலை வினை, குறிப்பு வினை

சில வினைகளில் காலம் நன்றாகத் தெரியும். அவை **தெரிநிலை வினை** எனப்படும். எ–கா: **அவன் வந்தான்.** வந்தான் என்பது இறந்தகாலம் என நன்றாய்த் தெரிகிறது.

சில வினைகளில் காலம் நன்றாய்த் தெரியாது; குறிப்பாய் உணர வேண்டும். அவை **குறிப்பு வினை** எனப்படும். எ–கா: **அவன் நல்லன்.** நல்லன் என்பதில் காலம் வெளிப்படையாய்த் தெரியவில்லையன்றோ?

### தன்வினை, பிறவினை

தானே செய்வது தன்வினை. பிறரைச் செய்யும்படித் தூண்டுவது பிறவினை. எ–கா:

**தன்வினை:** அவன் ஓடினான்.
அவன் வேலை செய்தான்.

**பிறவினை:** அவன் மாட்டை ஓட்டினான்.
அவன் வேலை செய்வித்தான்.

### செய்வினை, செயப்பாட்டுவினை (ACTIVE VOICE AND PASSIVE VOICE)

செய்ததாக உள்ளது செய்வினை. செய்யப்பட்டதாக உள்ளது செயப்பாட்டுவினை. எ–கா:



**செய் வினை:** திருவள்ளுவர் திருக்குறளை எழுதினார்.

**செயப்பாட்டு வினை:** வள்ளுவரால் குறள் எழுதப்பட்டது.

### உடன்பாட்டுவினை, எதிர்மறைவினை (AFFIRMATIVE AND NEGATIVE)

தொழில் நடந்ததாகச் சொல்வது உடன்பாட்டுவினை. நடவாததாகச் சொல்வது எதிர்மறை வினை. எ–கா:

**உடன்பாடு:** அவன் எழுதினான்.
**எதிர்மறை:** அவன் எழுதான்.

### திணை, பால், எண், இட வினைகள்

திணை, பால், எண், இடங்களுக்கு ஏற்ப முடியும் வினைச் சொற்களை, இன்ன திணைவினை, இன்ன பால்வினை, இன்ன எண் வினை, இன்ன இடவினை என்றெல்லாம் பிரிப்பதும் உண்டு. இறுதியில் வரும் விகுதிகளைக் கொண்டு இவற்றை யறியலாம். அவையாவன:—

### விகுதிகள்

வந்தனன், வந்தான் என, **அன், ஆன்** விகுதியில் முடிவன, உயர்திணை ஆண்பால் ஒருமைப்படர்க்கை வினையாகும்.

வந்தனள், வந்தாள் என, **அள், ஆள்** விகுதிகளில் முடிவன, உயர்திணைப் பெண்பால் ஒருமைப் படர்க்கை வினையாகும்.

**வந்தனர்**, வந்தார், வருப என, **அர், ஆர், ப** விகுதிகளில் முடிவன, உயர்திணைப் பலர்பால் பன்மைப் படர்க்கை வினையாகும்.

வந்தது, போயிற்று என, **து, று** விகுதிகளில் முடிவன, அஃறிணை ஒன்றன்பால் ஒருமைப் படர்க்கை வினையாகும்.

வந்தன, வாரா என, **அ, ஆ** விகுதிகளில் முடிவன, அஃறிணைப் பலவின்பால் பன்மைப் படர்க்கை வினையாகும்.

நான் வந்தனென், வந்தேன் என, **என், ஏன்** விகுதிகளில் முடிவன, தன்மை ஒருமை வினையாகும்.

நாங்கள் வந்தனம், வந்தாம், வந்தெனெம், வந்தேம், வந்தோம் என, **அம், ஆம், எம், ஏம், ஓம்** விகுதிகளில் முடிவன தன்மைப் பன்மை வினையாகும்.

நீ வந்தி, வந்தனை, வந்தாய் என, **இ, ஐ, ஆய்** விகுதிகளில் முடிவன, முன்னிலை ஒருமை வினையாகும்.

நீர் வந்தனிர், வந்தீர், வருமின், வாரும் என, **இர், ஈர், மின், உம்** விகுதிகளில் முடிவன, முன்னிலைப் பன்மை வினையாம்.

## முன்னிலை ஏவல் வினை

முன்னிலையில் உள்ளோரை ஏவுவது (கட்டளையிடுவது) ஏவல் வினையாகும். எ. கா: நீ செய்வாய், நீர் செய்மின், நீர் செய்யும் என, ஏவல்,



விகுதி பெற்றும், **நீ செய்** என விகுதி பெறாமலும் வரும். முன்னிலையில் உள்ளோரையே ஏவ முடியுமாதலின், ஏவல் முன்னிலைக்கே உரியது.

## வியங்கோள் வினை

வியம் கோள் = ஏவலைக் கொள்ளுதல். நான் செய்க, நாங்கள் செய்க, நீ செய்க, நீங்கள் செய்க, அவன் செய்க, அவள் செய்க, அவர் செய்க, அது செய்க, அவை செய்க என், **க** என்னும் விகுதியில் முடிந்து, எல்லாத் திணை, பால், எண், இடங்களுக்கும் பொதுவாய் வரக்கூடியதாக உள்ள வினை, **வியங்கோள் வினை** எனப்படும். முன்னிலைக்கு மட்டுமே உரிய விகுதி பெற்று வரும் ஏவல் வினைக்கும், பொதுவான **க** விகுதி பெற்று வரும் வியங்கோள் வினைக்கும் உள்ள வேற்றுமையை உணர்க.

இதுவரையும் வினைகளைப் பற்றிப் பொதுவாக ஆய்ந்தோம். இனி, சிறப்பாக ஆய்வோம். வினைச் சொற்களானவை, **வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம்** என மூவகைப்படும். இவை நமக்கு மிகவும் இன்றியமையாதவை. முறையே அவை வருமாறு:-

## வினைமுற்று

**நீலன் நிலத்தை உழுதான்** என்பதில், **உழுதான்** என்பது வினைமுற்று. உழு + த் + ஆன் = உழுதான். உழு — பகுதி; த் — இடைநிலை; ஆன் — விகுதி. **உழு** என்னும் பகுதி செய்யப்பட்ட தொழில் இன்னது (உழுதல்) என்பதைக் காட்டுகிறது. **ஆன்** என்னும்

விகுதி, உழுத பொருள், உயர்திணை ஆண்பால் ஒருமைப் படர்க்கை (நீலன்) என்பதைக் காட்டுகிறது. எனவே, வினைமுற்றின் விகுதி, தொழிலைச் செய்த பொருளின் திணை, பால், எண், இடங்களைக் காட்டும் என்பது விளங்கும். வினைமுற்று என்றால், இறுதியில் இத்தகைய விகுதி வந்து முற்றுப் பெற்றிருக்க வேண்டும். (வினைமுற்று=வினைக்குரிய தகுதிகள் முற்றுப் பெற்றிருப்பது.)

### எச்சம்

**உழுதான்** என **ஆன்** விகுதி சேர்த்துக் கூறாமல், **உழுது** என்றோ, **உழுத** என்றோ நிறுத்துவோமே யானால், இச் சொற்களில், உழுத பொருள் இன்னின்ன திணை, பால், எண், இடத்தைச் சேர்ந்தது, என்பது புலப்பட வில்லையன்றோ? எனவே, இச் சொற்கள் எழுவாயைப் புரிந்து கொள்ளும்படி முற்றுப் பெறாமல், புரிந்து கொள்ளாதபடிக் குறைவாய் உள்ளன. இத்தகைய குறைவினைகளுக்கே **எச்சம்** என்று பெயர் கூறுவர். எச்சம்=குறை. இது வினையெச்சம், பெயர் எச்சம் என இருவகைப்படும். இவ் விருவகை எச்சங்களும் வினைச்சொற்களே. ஓர் எச்சம் (**உழுது வந்தான்** என) பின்னால் ஒரு வினைச்சொல்லைக் கொண்டு முடியுமானால் **வினையெச்சம்** எனப்படும். ஓர் எச்சம் (**உழுத நீலன்** என) பின்னால் ஒரு பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிந்தால் **பெயரெச்சம்** எனப்படும்.



## 1. வினையெச்சம்

**உழுது** வந்தான் }<br>**உழ** வந்தான் } வினை யெச்சங்கள்

மேலே காட்டப்பட்டுள்ள **உழுது, உழ** என்பவற்றைத் தனியாகப் பார்ப்போமானால், உழுதது யார் என்பது தெரியாது. பக்கத்திலுள்ள **சென்றான்** என்பதை நோக்கியே, உழுதது ஓர் ஆண் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறதன்றோ? இவ்விதம் தனக்கே எல்லா ஆற்றலும் இன்றி, மற்றொரு வினைச்சொல்லை எதிர்பார்த்து முடிகின்ற எச்சச் சொல்லுக்கு **வினையெச்சம்** என்று பெயராம். குறைபாடு உடையவர்கள், குறையில்லாத மற்றொருவரை எதிர்பார்த்துத்தானே ஆகவேண்டும்.

வினை யெச்சங்களிலேயே, **உழுது** என்பது போல **உ** வில் முடியும் வினை யெச்சங்களையும், **உழ** என்பது போல **அ** வில் முடியும் வினை யெச்சங்களையும் பகுத்தறிந்து கொள்ள வேண்டும். முன் வகைக்குச் **செய்து** என்னும் வாய்பாட்டு வினையெச்சம் என்றும், பின் வகைக்குச் **செய** என்னும் வாய்பாட்டு வினையெச்சம் என்றும் பெயர். (வந்து, சென்று, இருந்து – செய்து வாய்பாடு. வர, செல்ல, இருக்க – செய வாய்பாடு. **வாய்பாடு** என்பது, ஓரே விதமாய் முடிந்திருப்பவற்றையெல்லாம் அடக்கிப் பொதுவாய் நிற்பது.)

### 2. பெயரெச்சம்

உழுத மனிதன் – இறந்த காலப் பெயரெச்சம்.
உழுகின்ற மனிதன் – நிகழ்காலப் பெயரெச்சம்.
உழும் மனிதன் – எதிர்காலப் பெயரெச்சம்.

மேலே காட்டியுள்ள **உழுத, உழுகின்ற, உழும்** என்னும் சொற்களைத் தனித்தனியாக நோக்குமிடத்துத் திணை, பால் தெரியவில்லை. பக்கத்திலுள்ள மனிதன் என்பதைக் கொண்டே திணை, பால் தெரிந்து கொள்ள முடிகின்றது. இவ்விதமாகத் தனக்கே எல்லா ஆற்றலும் இன்றி, ஒரு பெயர்ச்சொல்லை எதிர் நோக்கி முடிகின்ற எச்சச் சொல்லுக்குப் **பெயரெச்சம்** என்று பெயர்.

**உழுத, படித்த** முதலியன, **செய்த** என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம் எனப்படும்.

**உழுகிற, படிக்கின்ற** முதலியன **செய்கின்ற** என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம் எனப்படும்.

**உழும், படிக்கும்** முதலியன **செய்யும்** என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம் எனப்படும்.

## தொகைகள்

**இனி,** பெயர்ச்சொல் - வினைச்சொற்களைச் சேர்ந்த வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, இருபெயர் ஒட்டுப்பண்புத்தொகை, உவமைத் தொகை, உம்மைத்தொகை என்னும் ஐந்து தொகைகளைப் பற்றி ஒரு சிறிது நோக்குவோம்.



இந்த ஐந்தையும் அறிவிக்கும் உருபுகள் (அடையாளச் சொற்கள்) உண்டு. அவை சொற்கள் புணரும்போது வெளிப்படையாகத் தோன்றாமல், தொக்கு (மறைந்து) இருப்பதுமுண்டு. அப்படியிருப்பதற்குத் தான் **தொகை** என்று பெயர்.

### 1. வேற்றுமைத் தொகை

முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் தனியாக உருபுகள் இல்லையாதலின், அவ்வேற்றுமைகளில் உருபு தொக்குவரும் தொகை இல்லை. எனவே, நாம் இங்கு இரண்டாம் வேற்றுமையிலிருந்து ஏழாம் வேற்றுமை வரையும் எடுத்துக்கொள்வோம்.

**மரத்தை வெட்டினான்** என்பதில், (**மரம் + ஐ = மரத்தை**) மரத்தை என இரண்டாம் வேற்றுமை **ஐ** உருபு வெளிப்படையாக (விரிந்து) வந்துள்ளது. இதனை 'இரண்டாம் வேற்றுமை விரி' என்பார்கள்.

இப்படியில்லாமல், **மரம் வெட்டினான்** என்பதில், **ஐ** உருபு தொக்கு (மறைந்து) நிற்பதால், இதனை 'இரண்டாம் வேற்றுமைத் தொகை' என்பார்கள். மற்றைய வேற்றுமைத் தொகைகளையும் இப்படியே கொள்ள வேண்டும்.

### 2. வினைத்தொகை

முன்பு பெயரெச்சத்தைப் பற்றித் தெரிந்து கொண்டுள்ளோம். பெயரெச்சத்தின் சுருக்கமே வினைத்தொகை என்று சொல்லலாம்.

உழுத மனிதன், உழுகின்ற மனிதன், உழும் மனிதன் என்பவற்றில் **உழுத, உழுகின்ற, உழும்** என்னும் மூன்று வினைச்சொற்களும் **மனிதன்** என்ற பெயரைக் கொண்டு முடிவதால் **பெயரெச்சம்** எனப் பட்டன அல்லவா?

**உழுத** என்பதில் (உழு + த் + அ) உழு-பகுதி; த் இறந்த காலத்தைக் காட்டும் அடையாளமான இடைநிலை; அ- பெயரெச்ச விகுதி.

**உழுகின்ற** என்பதில் (உழு + கின்று + அ) உழு-பகுதி; **கின்று**-நிகழ்கால இடைநிலை; அ-விகுதி.

**உழும்** என்பதில் (உழு + உம்) உழு - பகுதி; **உம்** - விகுதி.

இவ்விதமில்லாமல், **உழு மனிதன்** என்பது மட்டும் இருந்தால், **உழு** என்பதை **வினைத்தொகை** என்பார்கள். அஃதாவது, வினைச்சொல்லில் வரக் கூடிய இடைநிலை, விகுதி என்பவை தொக்கு, **உழு** எனப் பகுதி மட்டும் இருப்பதால் இது **வினைத் தொகை** எனப்பட்டது.

எனவே, எந்த வினைச்சொல்லாவது பகுதியாய் மட்டும் நின்று, பக்கத்தில் ஒரு பெயரைக்கொண்டு முடியுமேயானால், அதனை **வினைத்தொகை** என்று தங்கு தடையின்றிச் சொல்லலாம். (எ. கா) ஆழ் கடல், தாவு குதிரை முதலியன.

### 3. இரு பெயர் ஒட்டுப் பண்புத்தொகை

**தென்னைமரம்** என்பதில் **தென்னை + மரம்** என இரு சொற்கள் உள்ளன. இரண்டு சொற்களும் இங்கு ஒரு பொருளையே குறிக்கின்றன. ஆயினும், **தென்னை** என்பது, மர வகைகளுள் சிறப்பாக ஓர் இனத்தையே குறிக்கும் **சிறப்புப்பெயர்** ஆகும். **மரம்** என்பது, மர இனம் முழுவதையும் குறிக்கும் **பொதுப்பெயர்** ஆகும். இவ்விதமாக, ஒரே பொருளைக் குறிக்கும் சிறப்புப்பெயர் முன்னும், பொதுப்பெயர் பின்னுமாக இரண்டு பெயர்கள் ஒட்டி (சேர்ந்து) வருவதற்கு **இரு பெயர் ஒட்டுப் பண்புத் தொகை** எனப் பெயர் கூறப்படும்.



தென்னைமரம் என்னுமிடத்து, தென்னை வேறன்று, மரம் வேறன்று. இரண்டனுள் எச் சொல்லாலும் அப்பொருளைக் குறிக்க முடியும். ஆதலின், தென்னைமரம் என்பது **தென்னையாகியமரம்** எனப் பொருள்படும். இங்கு **ஆகிய** என்னும் பண்பு உருபு தொக்கிருப்பதால், இது **பண்புத்தொகை** எனப் பட்டது. **சாரைப்பாம்பு, வாழைப்பழம்** போன்றனவற்றையும் இவ்விதமே கொள்ள வேண்டும்.

### 4. உவமைத்தொகை

ஒருவரின் மலர்ந்த முகத்திற்கு மலரை உவமை (ஒப்பு) சொல்ல வந்த புலவர், **மலர் முகம்** என்கின்றார். இங்கு, மலர் **உவமை** (உவமானம்) ஆகும்; முகம் உவமேயம் (எடுத்துக் கொண்ட பொருள்) ஆகும். **மலர் முகம்** என்பதை விரிக்குமிடத்து, **மலர் போன்ற முகம்** என விரிக்கின்றோம். **மலர் முகம்** என்பதின் இடையில் **போன்ற** என்னும்

உவம உருபு தொக்கிருப்பதால், இது **உவமைத் தொகை** எனப்படும். **வேல்விழி** (வேல் போன்ற விழி), **வரைத்தோள்** (மலை போன்ற தோள்) முதலியனவும் உவமைத் தொகைகளே.

### 5. உம்மைத் தொகை

அவன் இரவு பகல் உழைக்கிறான்—என்பதில், **இரவு பகல்** என்பதை விரிக்கும்போது **இரவும் பகலும்** உழைக்கிறான் என்று விரிப்போம். **இரவு பகல்** என்பதில், **உம்** தொக்கிருப்பதால், இது **உம்மைத் தொகை** எனப்படும். (உம்மை = உம்) **வில் வேல் வாள் கொண்டு போர் புரிந்தனர்** என்பதில், **வில் வேல் வாள்** (வில்லும் வேலும் வாளும்) உம்மைத் தொகையாம்.

### தொகைநிலைத் தொடரும் தொகா நிலைத் தொடரும்

இவ்விதம் **தொகை** என்னும் பெயரில் தொக்கு வரும் தொடர்கள் எல்லாம் **தொகைநிலைத் தொடர்** எனப்படும். எதுவும் தொகாமல் நிற்கின்ற முதல் வேற்றுமை, வினையெச்சம், பெயரெச்சம் போன்றவை யமைந்த தொடர்கள் எல்லாம் **தொகா நிலைத்தொடர்** எனப்படும்.

# புணர்ச்சி விதிகள்

இதுவரையும் எழுத்தையும், எழுத்தாலான சொல்லையும் பற்றித் தெரிந்து கொண்ட நாம், இனிச் சொல்லாலான புணர்ச்சிக்குச் செல்வோம். முறையே முதலில் **புணர்ச்சி** இன்னது என்பதைப் புரிந்து கொண்டு, பின்னர் விதிகட்குச் செல்லலாம்.

### நிலைமொழி, வருமொழி

நாம் எழுதும்போது, சொற்களைப் பூமாலை தொடுப்பது போல் தொடுத்துக் கொண்டே செல்கிறோம். இந்தத் தொடையில் ஒரு சொல்லோடு மற்றொரு சொல் சேர்கின்றதல்லவா? அவற்றுள், முதலில் நிற்கும் சொல்லுக்கு **நிலை மொழி** என்றும், அதனோடு வந்து சேரும் சொல்லுக்கு **வருமொழி** என்றும் பெயராம்.

(எ. கா) மாணவன் பாடம் படித்தான்.
மாணவன் + பாடம் + படித்தான்.

இங்கே, முன்னிரண்டு சொற்களை நோக்கின், மாணவன்—நிலைமொழி; பாடம்—வருமொழி ஆகும். பின்னிரண்டு சொற்களை நோக்கின், பாடம்—நிலைமொழி; படித்தான்—வருமொழி ஆகும்.

**பாடம்** என்னும் ஒரே சொல், முன் சொல்லை நோக்க வருமொழியாகவும், பின்சொல்லை நோக்க நிலைமொழியாகவும் இருப்பதைக் காண்க.

### புணர்ச்சி

முன் சொல்லியபடி, ஒரு சொல்லோடு மற்றொரு சொல் சேர்வதற்குத்தான் - அஃதாவது நிலைமொழியோடு வருமொழி புணர்வதற்குத்தான்- **புணர்ச்சி** என்று பெயராம். (புணர்ச்சி=புணருதல்= சேர்தல்) இது **இயல்பு புணர்ச்சி, விகாரப்புணர்ச்சி** என இருவகைப்படும்.

### 1. இயல்பு புணர்ச்சி

**மரம் வெட்டினன்** (மரம் + வெட்டினன் = மரம் வெட்டினன்) என்னும் தொடரில், **மரம்** என்னும் சொல்லும், **வெட்டினன்** என்னும் சொல்லும் புணர்ந்துள்ளன. இங்கு எந்தவிதமான விகாரமும் (எழுத்து மாறுபாடும்) இல்லாமல், இரண்டு சொற்களும் இயற்கையாக உள்ளபடியே புணர்ந்துள்ளன. இது போன்ற புணர்ச்சிக்குத்தான் **இயல்பு புணர்ச்சி** என்று பெயராம்.

### 2. விகாரப்புணர்ச்சி

(எ. கா. 1) **ஊர்** + சோத்து = ஊர்ச்சோத்து என்பதில், **ச்** என்னும் எழுத்துப் புதிதாகத் தோன்றியுள்ளது. (இது தோன்றல்)

(எ. கா. 2) நிலம் + கடந்தான் = நிலங் கடந்தான் என்பதில், **ம்** என்னும் எழுத்து **ங்** என்னும் எழுத்தாகத் திரிந்துவிட்டது. (இது திரிதல். திரிதல் =ஓர் எழுத்து மற்றோரெழுத்தாக மாறுதல்)



(எ. கா. 3) மரம்+வேர்=மரவேர் – என்பதில், **ம்** என்னும் எழுத்துக் கெட்டு விட்டது. இது கெடுதல். (கெடுதல்=மறைதல்).

மேலே காட்டியுள்ள மூன்று எடுத்துக்காட்டுக்களிலும், சொற்கள் புணர்ந்தவிடத்து, முன்னிருந்தபடி இயற்கையாய் இல்லாமல், சிறிது விகாரம் (மாறுபாடு) உற்றிருப்பதைக் காணலாம். இத்தகைய புணர்ச்சிக்கே **விகாரப்புணர்ச்சி** என்று பெயராம். இது, தோன்றல்விகாரம், திரிதல்விகாரம் கெடுதல்விகாரம் என மூவகைப்படும் என்பது. மேலுள்ள எடுத்துக் காட்டுக்களால் புலப்படும்.

இன்னும், ஓரே புணர்ச்சியில் இரண்டு விகாரங்களோ, மூன்று விகாரங்களுமோ வருதலும் உண்டு. எ. கா. வருமாறு:

#### இரண்டு விகாரங்கள்

பனை+பழம்=பன்+பழம்=பன்+அம்+பழம்= பனம்பழம்.

இங்கே, பனை என்பதின் இறுதியிலுள்ள **ஐ** கெட்டு, **பன்** என்றாக, புதிதாக **அம்** என்பது தோன்ற, **பனம்பழம்** என்பது உருவாயிற்று. இங்கே **ஐ** கெட்டு **அம்** தோன்றியிருத்தலின், **கெடுதல், தோன்றல்** என்னும் இரண்டு விகாரங்கள் வந்த புணர்ச்சி இது.

#### மூன்று விகாரங்கள்

பனை+காய்=பன்+காய் = பன்+அம்+காய்= பன்+அங்+காய்=பனங்காய்.

இங்கே, ஐ கெட, அம் தோன்ற, ம் என்பது ங் எனத் திரிய, **பனங்காய்** என்பது உருவாயிற்று. எனவே, கெடுதல், தோன்றல், திரிதல் என்னும் மூன்று விகாரங்களும் முறையே வந்த புணர்ச்சி இது. இவ்விதம் சொற்களுக்கேற்ப ஒன்றோ, இரண்டோ, மூன்றோ வருதல் அறிக.

மேலும், புணர்ச்சியைப் பொதுவாக வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி என இருவகையாகப் பிரிப்பதும் உண்டு. அவையாவன:-

### 1. வேற்றுமைப் புணர்ச்சி

எட்டு வேற்றுமைகளைப் பற்றி முன்பு நாம் படித்திருக்கிறோம். அந்த எட்டு வேற்றுமைகளுள், முதல் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என்னும் இரண்டும் தவிர, நடுவில் இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரையிலும் உள்ள ஆறு வேற்றுமைகள் அமைந்துள்ள தொடர்களில், உருபுகள் வெளிப்படையாக வாராமல், மறைந்து தொகையாக வந்துள்ள புணர்ச்சிக்கு **வேற்றுமைப் புணர்ச்சி** என்று பெயராம்.

### 2. அல்வழிப் புணர்ச்சி

வேற்றுமையல்லாத வழிகளில் (இடங்களில்) நிகழும் புணர்ச்சியெல்லாம் **அல்வழிப் புணர்ச்சி** எனப்படும். அவையாவன:— முதல் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை, வினையெச்சம், பெயரெச்சம், வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத் தொகை, உம்மைத்தொகை முதலியன. முதல்



வேற்றுமையும் எட்டாம்வேற்றுமையும், இடையிலுள்ள ஆறு வேற்றுமைகளும் பெற்றிருப்பதைப் போல, தமக்குத் தனியாக உருபுகள் பெற்றிருக்க வில்லையாதலின் அல்வழியில் தள்ளப்பட்டன.

இன்னும், புணர்ச்சியைப் பொதுவாக **உயிர் ஈற்றுப் புணர்ச்சி, மெய் ஈற்றுப் புணர்ச்சி** என மற்றும் இரு வகையாகப் பிரிப்பதும் உண்டு. அவை வருமாறு:-

### 1. உயிரீற்றுப் புணர்ச்சி.

**பந்து** என்னும் சொல்லின் ஈற்றில் (து=த்+உ) உ என்னும் உயிர் எழுத்து உள்ளது. **து** என்பது இருப்பினும், அது உயிர்மெய் எழுத்தாகலின், அதனை, த்+உ என இரண்டாகப் பிரிக்கின், உ என்பது தானே இறுதியில் ஒலிக்கின்றது. இவ்விதம், பன்னிரண்டு உயிர் எழுத்துக்களுள் ஏதேனும் ஓர் உயிர் எழுத்தை ஈற்றில் (கடைசியில்) உடைய நிலைமொழிச் சொல்லோடு மற்றொரு சொல் வந்து புணரும் புணர்ச்சிக்கு **உயிர் ஈற்றுப் புணர்ச்சி** என்று பெயராம்.

எ. கா:- பந்து + அடித்தல் — பந்தடித்தல். பலா + மரம்=பலாமரம்.

### 2. மெய்யீற்றுப் புணர்ச்சி

**பயிர்** என்னும் சொல்லின் ஈற்றில் **ர்** என்னும் மெய்யெழுத்துள்ளது. இவ்விதம், பதினெட்டு மெய் யெழுத்துக்களுள் ஏதேனும் ஒரு மெய்யெழுத்தை ஈற்றில் உடைய நிலைமொழிச் சொல்லோடு

மற்றொரு சொல் வந்து புணரும் புணர்ச்சிக்கு **மெய்யீற்றுப் புணர்ச்சி** என்று பெயராம்.

எ. கா:- பயிர்+வேலை=பயிர் வேலை. மண்+குடம் மட்குடம்.

இவற்றைப் போலவே, மற்றை உயிரீறு, மெய்யீறுகளையும் கண்டு கொள்க.

ஒரு புணர்ச்சியே உயிரீற்றுப் புணர்ச்சியாகவோ அல்லது மெய்யீற்றுப் புணர்ச்சியாகவோ இருப்பதும், அதுவே வேற்றுமைப் புணர்ச்சியாகவோ அல்லது அல்வழிப் புணர்ச்சியாகவோ நிற்பதும், அதுவே இயல்பு புணர்ச்சியாகவோ அல்லது விகாரப் புணர்ச்சியாகவோ அமைவதும் உண்டு. இனி உயிரீறும் மெய்யீறும், வேற்றுமையிலும் அல்வழியிலும், இயல்பாகவும் விகாரமாகவும் அமையும் நிலையைப்பற்றி ஆராய்வோம். முறையே முதலில் உயிரீற்று விதிகளை எடுத்துக் கொள்வோம். (விதி=முறை=சட்டம்.)

## I. உயிரீற்று விதிகள்.

இப்பகுதியில், அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ஏ, ஐ, ஓ என்னும் உயிர் எழுத்துக்களை ஈற்றிலுடைய சொற்களை மட்டும் எடுத்துக் கொள்வோம். எ, ஒ, ஔ என்னும் உயிர் எழுத்துக்களை இறுதியிலுடைய சொற்கள் இரண்டொன்றைத் தவிர இல்லையாதலின், அவற்றை விட்டுவிடுவோம்.



### உயிர்முதல், மெய்ம்முதல்

புணர்ச்சி என்பது, நிலைமொழியின் ஈற்றெழுத்தும், வருமொழியின் முதலெழுத்தும் புணர்வதைப் பற்றியது. ஆதலின், நாம் நிலைமொழியின் ஈறு உயிர் ஈறு அல்லது மெய் ஈறு என்று நோக்குவது போலவே, வருமொழியின் முதலெழுத்தும் உயிர் எழுத்தா அல்லது மெய் எழுத்தா என்பதையும் ஊன்றி நோக்கவேண்டும். பலா + இனிது = பலாவினிது—என்பதில், **இனிது** என்னும் வருமொழியின் முதல் எழுத்து இ என்னும் உயிர் எழுத்தாகும். இதற்கு **உயிர் முதல்** என்று பெயராம். பலா+மரம்= பலாமரம்-என்பதில், **மரம்** என்னும் வருமொழியின் முதல் எழுத்து (ம்+அ = ம) **ம்** என்னும் மெய்யெழுத்தாகும். இதற்கு **மெய்ம்முதல்** என்று பெயராம். **ம** என்னும் உயிர்மெய்யெழுத்து முதலில் இருந்தாலும், அதனை ம்+அ = ம—என இரண்டாகப் பிரிக்கின், **ம்** என்னும் மெய்யெழுத்தின் ஒலியே முன்னிருத்தலின் இது **மெய்ம்முதல்** எனப்பட்டது.

இவற்றைப் போலவே, மற்றைய உயிர் முதல், மெய்ம்முதல்களையும் கண்டு கொள்க.

இப்பகுதியில், உயிரீற்றின் முன் உயிர் முதலும், உயிரீற்றின் முன் மெய்ம்முதலும் வந்தால் என்ன நிகழும் என்பதைப் பற்றி ஆராயவேண்டும்

## 1. உயிர் முன் உயிர்

இனி முறையே முதலாவதாக, உயிர் எழுத்தை ஈற்றிலுடைய நிலைமொழிச் சொல்லின் பக்கத்தில், உயிரெழுத்தை முதலிலுடைய வருமொழிச் சொல் வந்து புணருமாயின் என்னென்ன மாறுதல் அடையக்கூடும், என்பதை ஆய்வோம். அஃதாவது, உயிரீற்றின் முன் உயிர்முதல் வருமாறு:-

### உடம்படுமெய்

வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி என்னும் இருவழிகளிலும், இ, ஈ, ஐ என்னும் மூன்று உயிரெழுத்துக்களை இறுதியிலுடைய சொற்களின் பக்கத்தில், எந்த உயிரெழுத்தை முதலிலேயுடைய சொல் வந்தாலும், நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையில் **ய்** என்னும் மெய்யெழுத்துப் புதிதாகத் தோன்றும். எ. கா:-

**(இ)** – மணி + ஓசை = மணி + ய் + ஓசை = மணியோசை.

**(ஈ)** – தீ + அணைந்தது = தீ + ய் + அணைந்தது = தீயணைந்தது.

**(ஐ)** – கலை + ஆர்வம் = கலை + ய் + ஆர்வம் = கலையார்வம். மணியோசை = மணியினது ஓசை – ஆறும் வேற்றுமைத் தொகை; இது வேற்றுமைப் புணர்ச்சி. தீ அணைந்தது - முதல் வேற்றுமை; இது அல்வழிப் புணர்ச்சி.



மேலே இ, ஈ, ஐ என்னும் ஈற்றுச் சொற்களின்
பக்கத்தில், ஓசை, அணைந்தது, ஆர்வம் என, ஓ, அ,
ஆ என்னும் உயிர் முதல் வருமொழி வந்ததும்,
இடையில் **ய்** என்னும் மெய் வந்ததை நோக்குக.
இருவழிகளிலும் (வேற்றுமையிலும்
அல்வழியிலும்) **ஏ** ஈற்றுச் சொல்லின் பக்கத்தில்
உயிர் முதல் வருமொழி வந்தால், இடையில் **ய், வ்**
என்னும் இரு மெய்களுள், இடத்திற்கேற்ப
ஏதேனும் ஒரு மெய் தோன்றும், எ. கா:-
(ஏ) தே + ஆரம் = தே + வ் + ஆரம் = தேவாரம்.
(தே = தெய்வம் ஆரம் = மாலை. தேவாரம் = தெய்
வத்திற்கு அணியும் அன்புப்பாமாலை.) தே என்பதன்
ஈற்றில் (த் + ஏ) **ஏ** உள்ளதன்றோ? அதன் பக்கத்தில்,
ஆரம் என **ஆ** என்னும் உயிர் முதல் வருமொழி
வந்ததும், இடையில் **ய்** வந்தது காண்க. (தேவாரம்)
= தெய்வத்திற்கு மாலை – நான்காம் வேற்றுமைத்
தொகை. இது வேற்றுமைப் புணர்ச்சி.
(ஏ) சே + அடி = சே + ய் + அடி = சேயடி.
அல்லது, சே + அடி = சே + வ் + அடி = சேவடி (சே =
செம்மை. சேயடி அல்லது சேவடி = செம்மையான
திருவடி).
இங்கே, (சே = ச் + ஏ) **ஏ** பக்கத்தில், **அடி** என
**அ** என்னும் உயிர் முதல் வருமொழி வந்ததும்,
இடையில் ய், வ் என்னும் இரு மெய்களுமே
வந்துள்ளதை நோக்குக. சேவடி = செம்மையாகிய
திருவடி-பண்புத்தொகை; இது அல்வழிப்புணர்ச்சி.

இரு வழிகளிலும், இ, ஈ, ஐ, ஏ என்னும் நான்கைத் தவிர, மற்றைய உயிரெழுத்துக்களை (அ, ஆ, உ, ஊ, எ, ஒ, ஓ, ஔ) ஈற்றிலுடைய நிலைமொழிகளின் பக்கத்தில் உயிர்முதல் வருமொழி வந்தால், இடையில் **வ்** என்னும் மெய்யே தோன்றும். எ. கா:–

(அ)– விள + ஓடு = விள + வ் + ஓடு = விளவோடு (விள = விளாம்பழம்)

(ஆ)– பலா + இனிது = பலா + வ் + இனிது = பலாவினிது. (பலா = பலாப்பழம்)

(உ)– மது + அருந்தாதே = மது + வ் + அருந்தாதே = மதுவருந்தாதே.

(ஊ)– பூ + எடுத்தான் = பூ + வ் + எடுத்தான் = பூவெடுத்தான்.

(ஓ)– கோ + இல் = கோ + வ் + இல் = கோவில். (கோ = அரசன் அல்லது கடவுள்; இல் = இருப்பிடம். கோவில் = அரண்மனை அல்லது ஆலயம்).

மேலே, **விள** முதலிய அ, ஆ, உ, ஊ, ஓ ஈற்று நிலைமொழிகளின் பக்கத்தில், **ஓடு** முதலிய உயிர் முதல் வருமொழிகள் வர, இடையில் **வ்** என்னும் மெய் தோன்றி யிருப்பதைக் காண்க.

**வ்** மெய் பெற்ற (கோ + வ் + இல்) **கோவில்** என்னும் சொல், பிற்காலத்தில் (கோ + ய் + இல்) **கோயில்** என **ய்** மெய் பெற்றதுபோல் திரித்து வழங்கப்பட்டு வருகிறது. இதனைக் கொண்டு,



**ஓ** ஈற்றுச் சொல்லின் பக்கத்தில் உயிர் முதல் வருமொழி வந்தால் **ய்** என்னும் மெய் வரலாம் என்று எண்ணுதீர்கள். இது, மக்களின் பழக்கத்தால் ஏற்பட்ட மாறுதல் என்றறிக.

விளவோடு = விளாம்பழத்தினது ஓடு – ஆறும் வேற்றுமைத் தொகை; இது வேற்றுமைப் புணர்ச்சி. பலாவினிது–முதல் வேற்றுமை; இது அல்வழிப் புணர்ச்சி.

மேலே, வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி என்னும் இருவழிகளிலும் ய், வ் என்னும் மெய்கள் தோன்றியிருப்பதைக் காண்க.

இரண்டு உயிரெழுத்துக்கள் பக்கத்தில் பக்கத்தில் இணைந்திருப்பது தமிழ்மொழியில் இல்லை. ஆதலின், இத்தகைய (நிலைமொழியீற்றிலும் வருமொழி முதலிலும் உள்ள) இரண்டு உயிரெழுத்துக்களை உடம்படுத்துவதற்காக (ஒன்று சேர்ப்பதற்காக) இடையில் ய், வ் என்னும் மெய்கள் தோன்றும். இவை உடம்படுத்தும் மெய்கள் ஆதலின், இவற்றை **உடம்படு மெய்** என்பர் இலக்கண நூலார். (உடம்படுத்தல் = ஒன்று சேர்த்தல்). இம்மெய்கள் புதியனவாகத் தோன்றுதலின், இப்புணர்ச்சியை, **தோன்றல் விகாரப் புணர்ச்சி** என்னலாமன்றோ?

## குற்றியலுகரம் கெடல்

குற்றியலுகரத்தைப் பற்றியும் முற்றியலுகரத்தைப்பற்றியும் முன்பு நாம் படித்துள்ளோம் (அவற்றை நன்கு நினைவு கூர்க.) குற்றியலுகரச்

சொற்கள் கு, சு, டு, து, பு, று என்னும் ஆறெழுத்துக்களில் முடிவனவாதலாலும், அவ் ஆறு எழுத்துக்களும் குற்றியல் உகரமாகிய உ என்பதில் முடிவனவாதலாலும், அந்த உ என்பது உயிரெழுத்து ஆதலாலும், அக் குற்றியலுகர ஈற்று (நாடு, வரகு, எஃகு, சுக்கு, வண்டு, சால்பு) சொற்களை, உயிர் ஈற்றுச் சொற்கள் என்னலாம். அச் சொற்கள் நிலைமொழிகளாக நிற்க, அவற்றின் பக்கத்தில், உயிர்முதல் வருமொழிகள் வந்தால் என்ன விகாரம் நிகழும் என்பதைப்பற்றி இப் பகுதியில் ஆய்வோம்.

மேலே உடம்படு மெய்யைப்பற்றிப் படித்த போது, உ ஈற்று நிலைமொழியும், உயிர்முதல் வருமொழியும் புணர்ந்தால் இடையில் வ் என்னும் உடம்படு மெய் தோன்றும் என்று அறிவித்தோம். அதற்கு எடுத்துக்காட்டாக, மது + அருந்தினன் = மது + வ் + அருந்தினன் = மதுவருந்தினன் என்பதையும் கண்டோம். மது என்பது, உ வில் முடிந்திருப்பினும் குற்றியலுகரமாகா தென்பதும், ம என்னும் தனிக் குற்றெழுத்தின் பின் து வந்திருப்பதால் மது என்பது முற்றியலுகரம் என்பதும் நமக்கு முன்னமே தெரியும்.

மது என்பதுபோன்ற தனிக் குற்றெழுத்தின் பின்னுள்ள முற்றியலுகரம்போலின்றி, நாம் மேலே படித்துள்ள ஆறு வகைக் குற்றியலுகரங்களின் பக்கத்தில் உயிர்முதல் வருமொழி வந்தால்,



மொழியின் ஈற்றிலுள்ள குற்றியலுகரமாகிய உ என்னும் எழுத்து இரு வழிகளிலும் கெடும். எ. கா:—

விளக்கு + எரிந்தது விளக் (க் + உ) + எரிந்தது விளக்க் + எரிந்தது விளக் (க் + எ) + ரிந்தது = விளக்கெரிந்தது. (இது முதல் வேற்றுமையாதலின் அல்வழிப் புணர்ச்சி). இங்கே, கு என்பதிலுள்ள உ கெட, நின்ற க் மேல், வருமொழியின் எ ஏறி, (க் + எ) கெ என்றாயினமை காண்க.

பந்து + அடித்தான் பந்த் + உ + அடித்தான் பந்த் + அடித்தான் = பந் (த் + அ) டித்தான் = பந்தடித்தான். (பந்தை அடித்தான் என இரண்டாம் வேற்றுமைத் தொகையாதலின், இது வேற்றுமைப் புணர்ச்சி). இங்கே, து வில் உள்ள உ கெட, நின்ற த் மேல், வருமொழியின் அ ஏறி, (த் + அ) த என்றாயினமை காண்க.

இப்படியே மற்றைய குற்றியலுகரங்களும், பக்கத்தில் உயிர் முதல் வருமொழி வரின் கெடுமென்றறிக. சில விடங்களில், விளக்கு எரிந்தது, பந்து அடித்தான் என, உ கெடாமலேயே எழுதப்பட்டுள்ளனவே எனின், படிப்போர்க்கு நன்கு புரிவதற்காக அப்படி எழுதுவதென் றுணர்க. இவ்விதம் உ கெடாமல் எழுதினாலும் தவறில்லை; ஆனால், இவ் விடங்களில் வ் அல்லது ய் உடம்படுமெய் சேர்த்து,

விளக்கு வெரிந்தது, விளக்குயெரிந்தது, பந்துவடித்தான், பந்துயடித்தான் என்று எழுதுதல் தவறாகும்.

பக்கத்தில் உயிர்முதல் வருமொழி வந்தால் குற்றியலுகர உ கெடுவது போலவே, சில விடங்களில் முற்றிய லுகர உ கெடுவதுமுண்டு. கு, சு, டு, து, பு, று- வில் முடிவனவே குற்றிய லுகரமாதலால், **செலவு** என்பது முற்றியலுகர மாகும். ஙு, ஞு, ணு, நு, மு, னு, யு, ரு, லு, வு, ழு, ளு- என்பனவற்றில் முடியும் சொற்கள் இருப்பின், அவை முற்றியலுகரங்களே. மது, மடு என்பவை, து, டு-வில் முடிந்திருப்பினும், தனிக்குற்றெழுத்தின் பின் இருப்பதால், அவையும் முற்றியலுகரங்களே. இத்தகைய தனிக் குற்றெழுத்து முற்றியலுகரங்களல்லாத மற்றைய **செலவு, கதவு** போன்ற முற்றியலுகரங்களின் பக்கத்தில் உயிர்முதல் வருமொழி வந்தாலேயே இருவழிகளிலும் அம்முற்றியலுகர உ கெடும். எ. கா:-

செலவு + அழித்தான் = செலவ் + உ + அழித்தான் = செலவ் + அழித்தான் = செலவழித்தான்.

கதவு + இடித்தான் = கதவ் + உ + இடித்தான் = கதவ் + இடித்தான் = கதவிடித்தான்.

இங்கே, **வ்** அல்லது **ய்** உடம்படுமெய் சேர்த்து, செலவு வழித்தான் – யழித்தான், கதவு விடித்தான்–யிடித்தான் என்றெல்லாம் எழுதுதல் தவறு.



டு, று – என்னும் எழுத்துக்களில் முடிந்திருக்கும் நெடில் தொடர்க் குற்றியலுகரத்திலும், உயிர்த் தொடர்க் குற்றியலுகரத்திலும், பக்கத்தில் உயிர் முதல் வருமொழி வரினும், மெய்ம்முதல் வருமொழி வரினும், வேற்றுமைப் புணர்ச்சியில், டு, று வில் உள்ள ட், ற் என்பவை இரட்டும். அஃதாவது, மற்றும் ஒவ்வொரு ட், ற் வரும். எ. கா:-

நாடு + அகம் = நாட்டகம்; நாடு + வளம் = நாட்டு வளம்.

ஆறு + ஓட்டம் = ஆற்றோட்டம்; ஆறு + வளம் = ஆற்று வளம்.

நெடில் தொடர்க் குற்றியலுகரங்களில் ட், ற் இரட்டியிருப்பதைக் காண்க.

செவிடு + ஆறுமுகம் = செவிட்டாறுமுகம்; செவிடு + மனிதன் = செவிட்டு மனிதன்.

வயிறு + அகம் = வயிற்றகம்; வயிறு + நோய் = வயிற்றுநோய்.

உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்களில் ட், ற் இரட்டியிருப்பதைக் காண்க. மேலே காட்டப்பட்டவையெல்லாம் வேற்றுமைப் புணர்ச்சியாகும் என்பதைப் பொருள் நோக்கிப் புரிந்துகொள்க. சமயம் நேர்ந்ததால், மெய்ம்முதல் வருமொழியும் இங்கே கூறப்பட்டுள்ளது.

இங்கே, ட், ற் வேற்றுமைப் புணர்ச்சியில் இரட்டும் என்றோம். ஆனால், சிறுபான்மை அல்வழியில் இரட்டுவதும், வேற்றுமையில்

இரட்டாமல் இருப்பதுங்கூட உண்டு. மற்றும், மேலே, குற்றியலுகரம் கெடும் என்றோமே, அது கெடாமல், அங்கு வரக்கூடாத வி உடம்படு மெய் வருதலும் உண்டு. இச்சிறுபான்மைகளையெல்லாம் உய்த்துணர்ந்து, பொருட்படுத்தாது விடுக.

இதுவரையும் உயிர் முன் உயிர் வருவதைப் பற்றிப் படித்தோம். இனி உயிர் முன் மெய் வருவதைப் பற்றிப் படிப்போம்.

## 2. உயிர் முன் மெய்

உயிர் முன் மெய் என்றால், உயிரெழுத்தை ஈற்றிலுடைய நிலைமொழியின் பக்கத்தில், மெய்யெழுத்தை முதலிலுடைய வருமொழி வந்து புணர்வது, என்பதை மீண்டும் ஈண்டு நினைவு கூர்க.

இப்பகுதியில், நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையில் ஒற்று மிகுவதும், ஒற்று மிகாமையும் இன்றியமையாதன வாகும். ஒற்று மிகல் = ஒற்று இரட்டித்தல் = புதிதாக மெய்யெழுத்துத் தோன்றல். ஒற்று மிகாமை = புதிதாக ஒன்றும் மெய்யெழுத்துத் தோன்றாமல், நிலைமொழியும் வருமொழியும் இயற்கையாய் உள்ளபடியே யிருத்தல்.

ஒற்று மிகல் — மிகாமை என்னும் ஆராய்ச்சி, வல்லின உயிர்மெய்யெழுத்தை முதலில் உடைய வருமொழிச்சொல் வரும்போதேயாம். எடுத்துக் காட்டாக:- கல்வி கற்றான், காவிரிச் சிறப்பு, கற்கண்டு தின்றான், பலாப் பழம் -- முதலியவற்றை நோக்குக. மேலேயுள்ள கற்றான், சிறப்பு, தின்றான்



பழம் என்னும் வருமொழிகள், க் (க), ச் (சி), த் (தி). ப் (ப) என்னும் வல்லின எழுத்துக்களை முதலில் கொண்டிருப்பதைக் காண்க. இவ்விதம். க — கௌ ச — சௌ, த — தௌ, ப — பௌ என்னும் வரிசை களில் உள்ள உயிர்மெய் யெழுத்துக்களை முதலில் உடைய சொற்கள் வருமொழிகளாக வரும்போதே, க், ச், த், ப் — என்னும் மெய்கள் மிகுவது அல்லது மிகாமை என்னும் ஆராய்ச்சிக்கு இடமுண்டென அறிக. ட — டௌ, ற — றௌ என்னும் வல்லின வரிசைகளில் உள்ள உயிர்மெய் யெழுத்துக்கள் தமிழ்மொழியில் சொல்லின் தொடக்கத்தில் வாரா வாதலின், அவற்றை விட்டுவிடலாம்.

மேலே. வல்லெழுத்துக்களை முதலிலே கொண்ட வருமொழிகள் வருவதைப் பற்றிப் பேசினோம். ஆயின், மெல்லெழுத்துக்களையோ, இடையெழுத்துக்களையோ முதலிலே கொண்ட வருமொழிகள் (ஞமலி, நாய், மாடு, யாண்டு, வண்டி — போன்றவை) வரின், மெல்லொற்றும், இடையொற்றும் மிகா.

ஆனால், அ-இ என்னும் தனிச் சுட்டெழுத் துக்கள், எ என்னும் தனி வினாவெழுத்து. ஐ—கை— மை-தை முதலிய ஐ ஈற்று ஓர் எழுத்துச் சொற்கள் ஆகிய இந்நிலைமொழிகளின் முன் மட்டும், மெல் லின - இடையின வருமொழிகள் வரின், மெல்லின ஒற்றும் இடையின ஒற்றும் மிகும். இனி முறையே ஒவ்வோர் உயிரீற்றுப் புணர்ச்சியாக ஆய்வோம்.

## 'அ' ஈற்றுப் புணர்ச்சி

இப்பகுதியில், **அ** என்பதை ஈற்றிலுடைய பலவகையான நிலைமொழிச் சொற்களின் பக்கத்தில் வல்லின முதல் வருமொழிகள் (வல்லின எழுத்தை முதலிலே கொண்ட சொற்கள்) வந்தால் என்ன நிகழும் என்பதை நோக்குவோம்

**(1) செய வாய்பாட்டு வினையெச்சத்தில்.**

உண்ண+சென்றான்=**உண்ணச்** சென்றான்.
படிக்க+போனான்=படிக்**கப்** போனான்.

மேலே, உண்ண, படிக்க என்னும் **செய** என்னும் வாய்பாட்டு வினையெச்சங்களின் பக்கத்தில் வலி(வல்லினம்)வந்ததும் மிக்கிருப்பதைக் காண்க. எனவே, **செய** என்னும் வாய்பாட்டு வினையெச்சங்களில் ஒற்று மிக்கே திரும்.

**ஆக, மிக, என.**

அவ்விதமாக+செய்தான்=அவ்வித**மாகச்** செய்தான்
மிக+பெரிது=**மிகப்**பெரிது.
என+கூறினான்=**எனக்** கூறினான்.

**இவ்வாறு, செய** வாய்பாட்டைச் சேர்ந்த ஆக, மிக, என என்பவற்றிலும் வலி மிகவேண்டும்.

**(2) பெயரெச்சங்களில்.**

எழுதின+பையன்=எழுதின பையன் – (செய்த வாய்பாடு)



எழுதுகின்ற+பையன் = எழுதுகின்ற பையன் – (செய்கின்ற வாய்பாடு) மேலுள்ள இரண்டும் தெரிநிலைவினைப் பெயரெச்சங்கள்.

கரிய+குதிரை=கரிய குதிரை } குறிப்புப்பெய
இனிய+பேச்சு=இனிய பேச்சு } ரெச்சங்கள்

ஓடாத+காளை=ஓடாத காளை –எதிர்மறைத் தெரி [நிலைப் பெயரெச்சம்.

அல்லாத+பொருள்=அல்லாத பொருள் - எதிர் [மறைக் குறிப்புப் பெயரெச்சம்.

மேலே, பலவகையான பெயரெச்சங்களிலும் வல்லின ஒற்று மிகாதிருப்பதைக் காண்க. எனவே, **அ** ஈற்றிலுள்ள எந்தப் பெயரெச்சத்திலும் ஒற்று மிகாது.

**(3) எதிர் மறைப் பெயரெச்சத்தில்.**

மேலே, ஓடாதகாளை, அல்லாத பொருள் என எதிர்மறைப் பெயரெச்சத்திலும் ஒற்று மிகாமையைக் கண்டோம். ஆனால், அவ் வெதிர்மறைப் பெயரெச்சத்தின் ஈற்றெழுத்தாகிய **த** என்பது சில சமயம் கெட்டு விடுவதுண்டு. அவ்விதம் ஈறு கெட்டுள்ள எதிர்மறைப் பெயரெச்சத்தில் மட்டும் ஒற்று மிகுவதுண்டு. எ. கா:—

ஓடா(த)+காளை=ஓடா+காளை=ஓடா+க்+காளை =ஓடாக் காளை. அல்லா(த)+பொருள்=அல்லா+பொருள்=அல்லா+ப்+பொருள்= அல்லாப் பொருள்.

### (4) அந்த, இந்த, எந்த.

அந்த+காடு=அந்தக்காடு.
இந்த+தோணி=இந்தத்தோணி.
எந்த+பொருள் எந்தப்பொருள்.

மேலுள்ளவாறு, அ ஈற்றில் முடியும் அந்த, இந்த, எந்த என்னும் சொற்களில் வலி மிகும்.

### (5) 'அ' சுட்டு

அ+பையன் அப்பையன்.
அ+மனிதன் அம்மனிதன்.
அ+வண்டி அவ்வண்டி.

மேலுள்ளாங்கு, தனிச் சுட்டெழுத்தாகிய அ என்பதன் பக்கத்தில் வலி, மெலி, இடை என்னும் மூன்றினத்து ஒற்றுக்களும் மிகும்.

### (6) பல, சில

பல என்பதோடு பல என்பதும், சில என்பதோடு சில என்பதும் புணரின், பின் கண்டவாறெல்லாம் இருக்கும். எ. கா:—

பல+பல பலபல, பலப்பல, பற்பல.
சில+சில சிலசில, சிலச்சில, சிற்சில.

மேலே, வலி மிகாமலும், வலி மிக்கும் ல என்பது ற் எனத் திரிந்தும் வந்திருப்பதை நோக்குக.

இன்னும், பல, சில என்பவற்றோடு, பிற வல்லின முதல் வருமொழிகள் புணரின், பின் கண்டவாறு இருக்கும். எ. கா:—



பல+கலைகள்=பலகலைகள், பல்கலைகள்.
சில+பொருள்=சிலபொருள், சில்பொருள்.

மேலே, வலி மிகாதும், ல என்பதிலுள்ள அ போய் ல் மட்டும் தங்கியும் இருத்தலைக் காண்க.

மற்றும், பல, சில என்பவற்றோடு, மெல்லின முதல் வருமொழிகளும், இடையின முதல் வருமொழிகளும், வந்தால் பின் கண்டவாறெல்லாம் இருக்கும். எ. கா:—

பல+ஞானம்=பலஞானம், பன்ஞானம்.
பல+நாள்=பலநாள், பன்னாள்.
பல+மணி=பலமணி, பன்மணி.
} மெல்லின வருமொழி வர இருவிதமாயினமை காண்க.

பல+யாழ்=பலயாழ், பல்யாழ்.
பல+வாள்=பலவாள், பல்வாள்.
} இடையின வருமொழி வர இருவிதம் காண்க.

### (7) 'அ' ஈற்று வினைமுற்றுக்களில்

அ ஈற்றுடைய வினைமுற்றில் பெரும்பாலும் வலி மிகாமல் இயல்பாக இருக்கும்.

வாழிய+கண்ணே=வாழிய கண்ணே!
வாழ்க+கண்ணே=வாழ்க கண்ணே!
} வியங்கோள் வினைமுற்றில் இயல்பு.

ஓடின+குதிரைகள்=ஓடின குதிரைகள்—அஃறிணைப் பலவின்பால் படர்க்கை வினைமுற்றில் இயல்பு.

நட+கண்ணு=நடகண்ணு, நடக்கண்ணு- மேலுள்ளாங்கு, முன்னிலை ஏவல் ஒருமை வினை முற்றில் மட்டும் இயல்பாயும் வரலாம்; வலி மிக்கும் வரலாம்.

**(8) 'உடைய' – ஆறன் உருபு.**

என்னுடைய+கை = என்னுடைய கை.

கந்தனுடைய+தோள் = கந்தனுடைய தோள்.

மேலுள்ளாங்கு, ஆறும் வேற்றுமை உருபாகிய **உடைய** என்பதன் பக்கத்தில் வலி மிகாது.

**(9) 'ம்' கெட்டு நின்ற 'அ' ஈறு**

வட்டம், மரம் முதலிய **ம்** ஈற்றுச் சொற்கள், **ம்** கெட, வட்ட, மர என நின்றபோது, பக்கத்தில் வல்லின முதல் வருமொழி வரின் வலி மிகும். எ. கா

வட்டம்+பலகை=வட்ட+பலகை=வட்டப் [பலகை.

மரம்+கிளை=மர+கிளை=மரக்கிளை.

**(10) பிற, மற்றைய, முதலிய.**

பிற+பொருள்=பிறபொருள்.

மற்றைய+காடுகள்=மற்றைய காடுகள்

முதலிய+பொருள்கள்=முதலிய பொருள்கள்

மேலுள்ளவாறு, 'அ' ஈற்றையுடைய பிற, மற்றைய, முதலிய என்னும் சொற்களிலும் வலி மிகாது.



மேலே பெரும்பாலும் வல்லின வருமொழிகள் வருவதைப் பற்றிப் பேசினோம். மெல்லின வருமொழிகளும், இடையின வருமொழிகளும் வருவதைப் பற்றிப் பேசாத புணர்ச்சிகளிலெல்லாம், அவை வந்தால், எந்த மெல்லின ஒற்றும் இடையின ஒற்றும் மிகுவதில்லையென்றறிக.

படித்த+மாணவன்=படித்த மாணவன்.

ஓடுகிற+வண்டி=ஓடுகிற வண்டி.

## 'ஆ' ஈற்றுப் புணர்ச்சி.

இனி இப்பகுதியில் **'ஆ'** ஈற்றுப்புணர்ச்சியை நோக்குவோம்.

**(1) அம்மா, அப்பா, மாமா, தாத்தா.**

இப்பெயர்களின் முன், இருவழிகளிலும் வலி இயல்பாகும். எ. கா:—

அம்மா தந்தாள், அப்பா சென்றார், மாமா தந்தார், தாத்தா பெரியவர்–இவை முதல் வேற்றுமை–அல்வழி. இங்கே இயல்பாயினமை காண்க.

அம்மா குரல், அப்பா துணி, மாமா கடிகாரம், தாத்தா தடி (அம்மாவினுடைய குரல்.........என) இவை ஆறும் வேற்றுமைத்தொகை-வேற்றுமைப் புணர்ச்சி. இங்கேயும் இயல்பாயினமை காண்க.

### (2) 'ஆ' ஈற்று வினாப்பெயர்

அவனா+செய்தான்=அவனா செய்தான்?
எருமையா+போயிற்று=எருமையா போயிற்று?]

மேலே, அவனா, எருமையா என 'ஆ' ஈற்றில் முடிந்துள்ள வினாப்பெயர்கட்கு முன் இயல்பானது காண்க.

யா-என்பது ஒரு வினாப்பெயர். யா=யாவை=எந்தப் பொருள்கள். இப்பெயரின் முன்னும் இயல்பாகும். எ. கா:—

யா+கொடுத்தாய்=யாகொடுத்தாய்? (எந்தப்=பொருள்களைக் கொடுத்தாய்?) இயல்பு காண்க.

### (3) 'ஆ' ஈற்று விளிப்பெயர்

கந்தா+கொடு=கந்தா கொடு.
முனியா+செல்=முனியாசெல்.
அம்மா+சோறுபோடு=அம்மா சோறுபோடு.

மேலுள்ளவாறு, கந்தனையும் முனியனையும் அம்மாவையும் விளிக்கின்ற பெயர்களாகிய கந்தா, முனியா, அம்மா முதலிய 'ஆ' ஈற்று விளிப்பெயர்களின் முன் வலி இயல்பாகும்.

### (4) ஆ, மா

பசு என்னும் பொருளுடைய 'ஆ' என்னும் சொல்லின் முன்னும், மிருகம் என்னும் பொருளில் வரும் 'மா' என்னும் சொல்லின் முன்னும் அல்வழியில் இயல்பாகும்; வேற்றுமையில் மிகும் எ. கா:—



ஆ+சிறந்தது=ஆ சிறந்தது. } அல்வழியில்
மா+சென்றது=மா சென்றது. } இயல்பு

ஆ+குளம்பு=ஆக்குளம்பு (பசுவினது குளம்பு)
மா+கொம்பு=மாக்கொம்பு (மிருகத்தினது கொம்பு)

ஈண்டு வேற்றுமையில் வலி மிக்கது.

### (5) 'ஆ' ஈற்று மரப்பெயர்கள்

மா என்னும் சொல் மாமரம் என்னும் பொருளில் நிற்கும்போது, பக்கத்தில் வரும் வருமொழி வல்லினத்திற்கு ஏற்ற மெல்லின ஒற்று மிகும். வேறு சில ஆ ஈற்று மரப்பெயர்களிலும் இவ்விதமே மெலி மிகும். மெலி மிகுவது வேற்றுமைப் புணர்ச்சியில் மட்டுமேயாம். எ. கா:—

மா+காய், தளிர், பழம்=மாங்காய், மாந்தளிர், மாம்பழம், (மாமரத்தினது காய்.......என, ஆறும்) வேற்றுமைப் புணர்ச்சியில், ங், ந், ம் என்னும் மெலிகள் மிக்கிருப்பதைக் காண்க.

விளா+பழம்=விளாம்பழம் } பிற மரப் பெயர்
காயா+பூ=காயாம்பூ } களிலும் மெலி மிக்கது.

மேலே மெலி மிகும் என்றாலும், பலா, களா போன்றவற்றின் முன் வலி மிகும் என்றுணர்க. எ. கா:—

பலா+பழம்=பலாப்பழம் } வலி மிக்கது.
களா+காய்=களாக்காய் }

இவ்விதம் சொல் நோக்கிப் பகுத்துணர்க.

**(6) நிலா, கனா, சுறா முதலிய பிற சொற்கள்**

இதுவரையும் சொல்லாத நிலா, கனா முதலிய 'ஆ' ஈற்றுச் சொற்களின் முன் பெரும்பாலும் இருவழிகளிலும் வலி மிகும் எ. கா:—

நிலாக்காலம், கனாக்கண்டேன், சுறாத்துண்டம்; நிலாத்தோன்றியது கனாப்பொய்த்தது, சுறாத்துள்ளிற்று. மேலே இருவழிகளிலும் மிக்கமை காண்க. எந்த 'ஆ' ஈற்று நிலைமொழி முன்னும், மெல்லின-இடையின வருமொழிகள் வரின் எதுவும் மிகாது.

பலா+மரம் = பலாமரம். பலா+விறகு = பலா [விறகு

## 'இ' ஈற்றுப் புணர்ச்சி

இனி இப்பகுதியில் 'இ' ஈற்றுப் புணர்ச்சியை நோக்குவோம்.

**(1) 'இ' சுட்டு**

இ+சோலை = இச்சோலை
இ+நாடு = இந்நாடு
இ+வண்டி = இவ்வண்டி

மேலுள்ளாங்கு, 'இ' என்னும் சுட்டின் பக்கத்தில் வல்லின முதல்மொழியே யன்றி, மெல்லின, முதல் மொழியும் இடையின முதல் மொழியும் வரினும், வலி மிகுவது போலவே மெலியும் இடையும் மிகும்.



இ+யானை = இவ்யானை என 'ய' இடையினம் வந்தாலும் 'வ்' என்பதே மிகும், [இ+அணில் = இவ்வணில் என உயிர்முதல் வரினும், 'வ்' (உடம்படுமெய் மிகும்.) 'அ' என்னும் சுட்டிற்கும் இவ்விதி பொருந்தும்.]

**(2) 'இ' ஈற்று வினையெச்சத்தில்**

வருந்தி+தேடினான் = வருந்தித்தேடினான்
ஓடி+போனான் = ஓடிப்போனான்

மேலுள்ளாங்கு, 'இ' ஈற்றுத் தெரிநிலை வினையெச்சத்தில் வலி வரின் மிக்கே திரும்.

**(3) அன்றி, இன்றி.**

அன்றி, இன்றி என்னும் குறிப்பு வினையெச்சங்களிலும் வலி மிகும். எ. கா:—

அவன் அன்றிச் செய்திருக்க முடியாது.
கையில் காசு இன்றிக் காரியம் முடியாது.

(இந்த அன்றி, இன்றி என்பவை, செய்யுளுள் அன்றா, இன்றா என்னும் உருவங்களில் வருவதுண்டு. அப்போது வலி மிகாது இயல்பாகும்.)

**(4) 'இ' ஈற்று வினைத்தொகையில்.**

தெளி+புனல் = தெளிபுனல் – என வினைத்தொகையில் இயல்பாகும்.

**(5) 'புளி' என்னும் சொல்லில்**

புளி + கறி = புளிக்கறி. }
புளி + கறி = புளிங்கறி. } இரண்டும் சரி

மேலுள்ளாங்கு, புளி என்னும் சொல்லில், வலி மிகுவதல்லாமல் மெலியும் மிகலாம்.

### (6) 'இ' ஈற்று உயர்திணைப் பெயரில்

மங்கையர்க்கரசி+படித்தாள் = மங்கையர்க்கரசி படித்தாள்.

பொன்முடி+போனாள் = பொன்முடி போனாள்.

வில்லி+சென்றான் = வில்லி சென்றான் (வில்லி = வில் வீரன்.)

மேலுள்ளாங்கு, இ ஈற்று உயர்திணைப் பெயர்களில் வலி மிகாது; இயல்பாகும்.

### (7) 'இ' ஈற்று அஃறிணைப் பெயர்களில்

எழுவாய் (முதல்) வேற்றுமையிலும், உம்மைத் தொகையிலும் இ ஈற்று அஃறிணைப் பெயர்களில் வலி மிகாது இயல் பாகும். எ. கா:—

அரிசி+சிறந்தது = அரிசி சிறந்தது (முதல் வேற்றுமை.) அரிசி+பருப்பு = அரிசி பருப்பு (அரிசியும் பருப்பும் எனப் பொருள் படுவதால் இது உம்மைத் தொகை)

இனி, இரு பெயர் ஒட்டுப் பண்புத் தொகையிலும் உவமைத் தொகையிலும் வலி மிக்கே தீரும்.

இருநிதி+செல்வம் = இருநிதிச் செல்வம். (இருநிதியாகிய செல்வம் – இ. பெ. ஒ. பண்புத் தொகை)

காவி+கண் = காவிக் கண் (காவி மலர் போன்ற கண் - உவமைத் தொகை)



### (8) 'இ' ஈற்றுக்குக் குறுக்குவழி

மேலுள்ளாங்கு இலக்கண நூற்களுள் 'இ' ஈற்றிற்கு விதிகள் கூறப்பட்டுள்ளன. இருப்பினும் சில 'இ' ஈற்றுச் சொற்களில் எப்படி நடந்து கொள்வதென்ற ஐயம் ஏற்படலாம். எனவே, மேலுள்ள விதிகளுள் கட்டுப்படாமல் நிற்பதாகத் தோன்றும் 'இ' ஈற்றுச்சொற்களைக் கையாள்வதற்கு இங்கே ஒரு குறுக்கு வழி தரப்படுகிறது. இதனை இயன்றமட்டும் மாணவர்கள் பின்பற்றலாம் அது வருமாறு:—

சில 'இ' ஈற்று நிலைமொழிச் சொற்களின் பக்கத்தில் பெயர்ச்சொல் வருமொழிகள் வரின், இடையே வலிமிகும்; வினைச்சொல் வருமொழிகள் வரின், வலி மிகாது இயல்பாகும் எ. கா:—

உதவி+தொகை = உதவித்தொகை
காவிரி+கரை = காவிரிக்கரை
} பெயர்ச்சொல் வருமொழிகளில் வலிமிக்கது.

உதவி+கோரினான் = உதவி கோரினான்
காவிரி+சிறந்தது = காவிரி சிறந்தது

வினைச்சொல் வருமொழிகளில் வலிமிகவில்லை. இந்த முறை நினைவில் இருத்தல் நன்று.

### (9) 'இ' ஈற்று வினைமுற்றில்

'இ' ஈற்று வினைமுற்றின் பக்கத்தில் வலி மிகாது இயல்பாகும். எ. கா:—

விடுவி + கண்ணப்பா = விடுவி கண்ணப்பா.
(கண்ணப்பனே விடுவிப்பாய். விடுவி—முன்னிலை ஏவல் வினைமுற்று)

### (10) 'படி' ஈற்று வினையெச்சத்தில்

வாழ்த்தும்படி, வரும்படி என, 'படி' என்பதில் முடியும் வினையெச்சங்களில் மிகக்கூடாது என்று சிலரும், மிகலாம் என்று சிலரும் முரண்பட்டுக் கூறுகின்றனர். இது ஒரு சிக்கலான பகுதியே. எனவே, இவ்விடத்தில் மிக்கோ, மிகாமலோ எப்படியும் இருக்கலாம் என்று விட்டு விடுவோம். எ. கா:—

அவனை வரும்படிக் கோருகிறேன் (மிக்கது)
மணமக்களை வாழ்த்தும்படி கோருகிறேன் (மிகவில்லை)

இறுதியாக, 'இ' என்னும் சுட்டெழுத்தின் பக்கத்தில்தவிர, மற்றைய 'இ' ஈற்று நிலைமொழிகளின் பக்கத்தில், மெல்லின—இடையின வருமொழிகள் வரின், எதுவும் மிகாதென்றுணர்க.

காவி + நிறம் = காவிநிறம்
தனி + வண்டி = தனிவண்டி.

## 'ஈ' ஈற்றுப் புணர்ச்சி

இனி இப்பகுதியில் 'ஈ' ஈற்றுப் புணர்ச்சியை நோக்குவோம்.



### (1) ஈ, தீ—என்னும் பெயர்களில்

ஈ + கூட்டம் = ஈக்கூட்டம்
தீ + புண் = தீப்புண்
தீ + குணம் = தீக்குணம்
} என வலிமிகும்.

(2) நீ, என்னும் முன்னிலை ஒருமைப் பெயரில்

நீ + பெரியவன் = நீ பெரியவன்
நீ + செய் = நீ செய் — என இயல்பாகும்.
வருமொழியில் மெலி, இடை வந்தால் இயல்பே.
தீ + மண்டிற்று = தீமண்டிற்று
தீ + வளர்ந்தது = தீவளர்ந்தது

## 'உ' ஈற்றுப் புணர்ச்சி

இனி 'உ' ஈற்றுப் புணர்ச்சி வருமாறு:—

(1) ஒடு, ஓடு, அது—என்னும் வேற்றுமை உருபுகளில்

ஒடு, ஓடு, என்னும் மூன்றும் வேற்றுமை உருபுகளையும், 'அது' என்னும் ஆறும் வேற்றுமை உருபையும் இறுதியிலுடைய பெயர்களின் பக்கத்தில் இயல்பாகும்.

வேலனொடு + சென்றான் = வேலனொடு சென்றான்
வேலனோடு + சென்றான் = வேலனோடு சென்றான்
முருகனது + துணை = முருகனது துணை

(2) 'உ' ஈற்று வினைத்தொகையில்

வினைத்தொகையாக உள்ள எந்த 'உ' ஈற்றுச் சொல்லும் இயல்பாகவே இருக்கவேண்டும்.

அடு+புலி = அடுபுலி (அடுதல் = கொல்லுதல்)
ஓடு+குதிரை = ஓடுகுதிரை

### (3) 'உ'-வினைமுற்றில்

'உ' ஈற்றில் முடியும் எந்த வினைமுற்றுச் சொல்லிலும் இயல்பே நிகழவேண்டும்.

ஓடிற்று+குதிரை = ஓடிற்று குதிரை
உழுதது+காளை = உழுதது காளை

### (4) அது, இது, உது-சுட்டுப்பெயர்களில்

மேலுள்ள சுட்டுப் பெயர்களில் இயல்பே நிகழும்.

அது+சென்றது = அது சென்றது
இது+பெரியது = இது பெரியது
உது+பிறந்தது = உது பிறந்தது

### (5) எண்ணுப் பெயர்களில்

எட்டு, பத்து என்னும் இரண்டு தவிர, மற்றைய ஒன்று முதலிய எண்ணுப் பெயர்களில் இயல்பே நிகழும். எட்டு, பத்து என்பவற்றில் மட்டும் வலிமிகும்.

ஒன்று+கொடு = ஒன்று கொடு
ஒரு+குதிரை = ஒரு குதிரை
இரு+குதிரைகள் = இரு குதிரைகள்
இரண்டு+கொடு = இரண்டு கொடு
மூன்று+கிளைகள் = மூன்று கிளைகள்
நான்கு+திசைகள் = நான்கு திசைகள்



ஐந்து+கண்டங்கள் = ஐந்து கண்டங்கள்
ஆறு+கோட்டைகள் = ஆறு கோட்டைகள்
ஏழு+கடல்கள் = ஏழு கடல்கள்
எழு+கடல் = எழுகடல்
ஒன்பது+புலிகள் = ஒன்பது புலிகள்
நூறு+காளைகள் = நூறு காளைகள்

மேலே இயல்பாயினமை காண்க.

எட்டு+குதிரைகள் = எட்டுக்குதிரைகள்
எட்டு+தொகை = எட்டுத்தொகை
பத்து+பாட்டு = பத்துப்பாட்டு
பத்து+தலைகள் = பத்துத்தலைகள்

மேலே எட்டு, பத்து என்பவற்றில் வலிமிக்கமை காண்க.

பதினெட்டு+குதிரைகள் = பதினெட்டுக் குதிரைகள்
முப்பத்தெட்டு+குதிரைகள் = முப்பத்தெட்டுக்குதிரைகள்

என, எட்டில் முடிவனவற்றில் எல்லாம் மிகும்.

இருபது+குதிரைகள் = இருபது குதிரைகள்
நாற்பது+கலைகள் = நாற்பது கலைகள்

என, பது (பத்து) என்பதில் முடிவனவற்றில் இயல்பே நிகழவேண்டும்.

### (6) குற்றியலுகரங்களில்

குற்றிய லுகரத்தைப் பற்றி முன்னர் (பக்கம் 20) ஆராய்ந்துள்ளோம். மீண்டும் ஒரு

முறை நினைவு செய்துகொண்டு இங்கு வருதல் நலம்.

### வன்றொடர்க் குற்றியலுகரத்தில்

வன்றொடர்க் குற்றியலுகரத்தில் அல்வழி, வேற்றுமை ஆகிய எங்கும் வலி மிக்கே வரவேண்டும்.

கொக்கு+கால் = கொக்குக்கால்
(ஆறாம் வேற்றுமை)

விற்று+சென்றான் = விற்றுச் சென்றான்
(அல்வழி)

### மென்றொடரில்

மென்றொடர்க் குற்றியலுகரத்தில், வேற்றுமையில் மிகும்; அல்வழியில் மிகாது.

நண்டு+கால் = நண்டுக்கால். ஆறாம் வேற்றுமையில் மிக்கது.

கண்டு+சென்றான் = கண்டு சென்றான். அல்வழியில் இயல்பாயிற்று.

### மென்றொடர் - இடப்பெயரில்

இடத்தைக்குறிக்கும் சொற்களாகிய அங்கு, இங்கு, உங்கு, எங்கு, ஆங்கு, ஈங்கு, ஊங்கு, யாங்கு முதலியவற்றில் வலி மிகும்.

அங்கு+கண்டேன் = அங்குக்கண்டேன்
இங்கு+கண்டேன் = இங்குக்கண்டேன்
உங்கு+கண்டேன் = உங்குக்கண்டேன்
எங்கு+சென்றாய் = எங்குச்சென்றாய்?



ஆங்கு+சென்றேன் = ஆங்குச்சென்றேன்
ஈங்கு+சென்றேன் = ஈங்குச்சென்றேன்
ஊங்கு+சென்றேன் = ஊங்குச்சென்றேன்
யாங்கு+கண்டாய் = யாங்குக்கண்டாய்

### மென்றொடர் - காலப்பெயரில்

காலத்தைக் குறிக்கும் சொற்களாகிய அன்று இன்று, என்று, பண்டு, முந்து முதலியவற்றில் இயல்பாகும்.

அன்று+கண்டேன் = அன்று கண்டேன்
இன்று+கண்டேன் = இன்று கண்டேன்
என்று+கண்டாய் = என்று கண்டாய்?
பண்டு+சொன்னான் = பண்டு சொன்னான்
முந்து+தந்தேன் = முந்து தந்தேன்

### 'ஐ' யாக மாறும் மென்றொடரில்

சிலசமயம், பண்டு, நேற்று என்பன பண்டை நேற்றை எனவும், அன்று, ஒன்று, இரண்டு என்பன, அற்றை, ஒற்றை, இரட்டை எனவும் மாறி வருவதும் உண்டு. இத்தகைய சொற்களில் வலி மிகும்.

பண்டு+காலம் = பண்டைக்காலம்
நேற்று+கூலி = நேற்றைக்கூலி
அன்று+கூலி = அற்றைக்கூலி
ஒன்று+கால் = ஒற்றைக்கால்
இரண்டு+காகம் = இரட்டைக்காகம்

இன்னும் இப்படி வருவனவற்றைக் கண்டு கொள்க.

### நெடில், உயிர், ஆய்தம், இடைத் தொடர்களில்

நெடில் தொடர், உயிர்த் தொடர், ஆய்தத் தொடர், இடைத் தொடர் என்னும் நால்வகைக் குற்றியலுகரங்களிலும், வேற்றுமை, அல்வழி என்னும் இரு சந்திகளிலும் இயல்பாகும்.

காது+குத்தல்  காதுகுத்தல்
(நெடில்--2 ஆம்-வேற்றுமை)
காது+சிறிது = காதுசிறிது (நெடில்-அல்வழி)
வரகு+கதிர் = வரகுகதிர் (உயிர் 6. வே.)
வரகு+சிறிது = வரகுசிறிது (உயிர்-அல்வழி)
எஃகு+பிடித்தான் = எஃகு பிடித்தான்
(ஆய்தம்–2. வே)
எஃகு+கடிது = எஃகு கடிது
(ஆய்தம்–அல்வழி)
தெள்கு+கால் = தெள்குகால் (இடை-6. வே.)
தெள்குசி+றிது = தெள்கு சிறிது
(இடை-அல்வழி) (தெள்கு ஒரு பூச்சி)

### இரட்டிக்கும் நெடில், உயிர்த் தொடர்களில்

'டு' என்பதில் முடியும் நெடில் தொடரிலும் உயிர்த்தொடரிலும் இடையிலே 'ட்' என்ற மெய்யும். 'று' என்பதில் முடியும் நெடில் தொடரிலும்



உயிர்த்தொடரிலும் இடையே 'ற்' என்ற மெய்யும் இரட்டிக்கும். அப்படி உள்ள சொற்களில் வலி மிகும்.

நாடு+பற்று = நாட்டுப்பற்று (நெடில்)
செவிடு+காது = செவிட்டுக்காது (உயிர்)
சோறு+பருக்கை = சோற்றுப்பருக்கை
(நெடில்)
கறிறு+படை = களிற்றுப்படை (உயிர்)
(களிறு – யானை)

இன்னும் இப்படி வருவன கண்டுகொள்க.

### (7) முற்றியலுகரங்களில்

நாம் முன்பு முற்றியலுகரத்தைப் பற்றியும் (பக்கம்-23) ஆராய்ந்துள்ளோம். அம் முற்றியலுகரத்தில் இயல்பாம்

தும்மு+குமரா = தும்முகுமரா
கதவு+பெரியது = கதவு பெரியது

இறுதியாக, 'உ' ஈற்றுச் சொற்களின் பக்கத்தில் மெலியோ, இடையோ வந்தால் எதுவும் மிகாமல் இயல்பாகவே வரும்.

கொக்கு+மூக்கு = கொக்குமூக்கு
எட்டு+வண்டிகள் = எட்டு வண்டிகள்

### 'ஊ' ஈற்றுப் புணர்ச்சி

இனி 'ஊ' ஈற்றுப் புணர்ச்சி வருமாறு:—

பூ என்னும் ஓர் எழுத்துப்பெயரின் பக்கத்தில் வலி வரின், வல்லினமும் மிகலாம்; அதன் இன

எழுத்தாகிய மெல்லினமும் மிகலாம்.

பூ+செடி = பூச்செடி (வலி மிக்கது)

பூ+செடி = பூஞ்செடி (இன மெலி மிக்கது)

ஒருமொழியில் மெல்லினமோ, இடையினமோ வரின், எதுவும் மிகாது.

பூ+மாலை = பூமாலை

பூ+வளம் = பூவளம்

## 'எ' ஈற்றுப் புணர்ச்சி

'எ' என்னும் தனி சிறுவெழுத்தின் பக்கத்தில் வலி, மெலி, இடை வரின், அந்த அந்த இனத்தின் ஒற்று மிகும். (எ=எந்த)

எ+பையன் = எப்பையன் (வலி மிக்கது)

எ+மாடு = எம்மாடு (மெலி மிக்கது)

எ+வீடு = எவ்வீடு (இடை மிக்கது)

எ+யானை = எவ்யானை (யகரம் வரினும் 'வ்' மிகும்)

'ஏ' ஈற்றில் முடியும் வேறு சொல் இல்லையாதலின் இதனை இவ்வளவில் நிறுத்துவோம்.

## 'ஏ' ஈற்றுப் புணர்ச்சி

'ஏ' ஈற்றில் முடியும் சொற்களும் மிகுதியாக இல்லை இருப்பினும் சில விதிகளை நோக்குவோம்.

### (1) 'சே' என்னும் சொல்லில்

'சே' என்பதன் பக்கத்தில் 'கன்று' என்னும் சொல் வரின், வலிக்கு இனமாகிய மெலிமிகும்.

சே+கன்று = சேங்கன்று (காளைக்கன்று)



### (2) இடைச் சொல்லாகிய ஏ ஈற்றில்

நான்+ஏ=நானே; அவன்+ஏ = அவனே: அதனால்+ஏ= அதனாலே-என, சில சொற்களின் இறுதியில் 'ஏ' என்னும் தனி இடைச்சொல் சேர்ந்து வருவதுண்டு. அத்தகைய சொற்களில் இயல்பே.

நானே+செய்தேன் = நானே செய்தேன்

அவனாலேயே+கெட்டது = அவனாலேயே கெட்டது

## 'ஐ' ஈற்றுப் புணர்ச்சி

### (1) 'ஐ' ஈற்று உயர்திணைப்பெயரில்

மங்கை+கற்றாள் = மங்கை கற்றாள்

தங்கை+கணவன் = தங்கை கணவன்

மேலுள்ளவாறு, 'ஐ' ஈற்று உயர்திணைப் பெயர்களில் இயல்பாகும்.

### (2) 'ஐ' ஈற்று அஃறிணைப் பெயரில்

முதல் வேற்றுமையிலும், உம்மைத்தொகையிலும் 'ஐ' ஈற்று அஃறிணைப் பெயர்களில் இயல்பாகும்.

யானை+பெரிது = யானை பெரிது (முதல் வேற்றுமை)

யானை+குதிரை = யானை குதிரை (யானையும் குதிரையும் எனப் பொருள் படுவதால் இது உம்மைத்தொகை.)

இனி, இருபெயர் ஒட்டுப் பண்புத்தொகையி லும், உவமைத் தொகையிலும் வலி மிக்கே நிற்கும். சாரை + பாம்பு = சாரைப்பாம்பு (சாரையாகிய பாம்பு - இ. பெ. ஒ. ப தொகை.)

பணை + தோள் = பணைத்தோள் (மூங்கில் போன்ற தோள் - உவமைத்தொகை)

### (3) 'ஐ' ஈற்று வினைத்தொகையில்

எந்த 'ஐ' ஈற்று வினைத்தொகையிலும் இயல்பாகும்.

குழை + சோறு = குழை சோறு (குழைந்தசோறு)

### (4) 'ஐ' ஈற்று மரப் பெயரில்

புன்னை + பூ = புன்னைப்பூ

முல்லை + காடு = முல்லைக்காடு

எனச் சிலவற்றில் வலிமிகும்.

தாழை + பூ = தாழம்பூ

பனை + பழம் = பனம்பழம்

எனச் சிலவற்றில் **'ஐ'** என்பது **'அம்'** ஆகத் திரியும்.

பனை + காய் = பனங்காய் என்பது போன்றவற்றில், **'ஐ'** என்பது **'அம்'** எனத் திரிந்தபின், **'ம்'** என்பது பக்கத்திலுள்ள வலிக்கேற்ற மெலியாகத் திரியும்.

### (5) திரிந்த 'ஐ' ஈற்றுச் சொல்லில்

பண்டு என்பது பண்டை எனவும், ஒன்று-இரண்டு என்பன ஒற்றை - இரட்டை எனவும் திரிந்து வருவதும், அவற்றில் வலிமிகும் என்பதும்,



பண்டைக்காலம், ஒற்றைக்கால், இரட்டைக்காகம் முதலிய எடுத்துக் காட்டுக்களுடன் **'உ'** ஈற்றுப் புணர்ச்சியில் (பக்கம் – 85) கூறப்பட்டிருத்தலைக் காண்க.

### (6) 'ஐ' ஈற்றுக்குக் குறுக்கு வழி

மேலுள்ளாங்கு இலக்கண நூற்களுள் **'ஐ'** ஈற்றிற்கு விதிகள் கூறப்பட்டிருப்பினும், சில **'ஐ'** ஈற்றுச் சொற்களில் எப்படி நடந்து கொள்வதென்ற ஐயம் ஏற்படலாம். எனவே, மேலுள்ள விதிகளுள் கட்டுப்படாமல் நிற்பதாகத் தோன்றும் **'ஐ'** ஈற்றுச் சொற்களைக் கையாள்வதற்கு இங்கே ஒரு குறுக்கு வழி தரப்படுகிறது. இதனை இயன்ற மட்டும் பின்பற்றலாம். அது வருமாறு:-

சில **'ஐ'** ஈற்று நிலை மொழிச் சொற்களை யடுத்துப் பெயர்ச்சொல் வருமொழிகள் வரின் இடையே **வலி மிகும்**; வினைச்சொல் வருமொழிகள் வரின் வலி மிகாது இயல்பாகும்.

| | |
|---|---|
| மழை + காலம் = மழைக்காலம்<br>கலை + கோவில் = கலைக்கோவில் | பெயர்ச் சொல் வருமொழிகளில் வலிமிக்கது. |
| மழை + பெய்தது = மழைபெய்தது<br>கலை + கற்றான் = கலைகற்றான் | வினைச்சொல் வருமொழிகளில் இயல்பு |

### (7) தனி எழுத்துச் சொற்களில்

**கை, தை, பை, மை** என்னும் தனி எழுத்தாக உள்ள சொற்களின் பின் மெல்லினம் வந்தால், வந்த அம் மெலி மிகும்

கை+நீண்டது = கைந்நீண்டது.

தை+மாதம் = தைம்மாதம்.

பை+நாகம் = பைந்நாகம் (நச்சுப் பையை உடைய பாம்பு)

மை+முகில் = மைம்முகில் (கரியமேகம்)

இறுதியாக,—தனி எழுத்தல்லாத 'ஐ' ஈற்றுச் சொற்களின் பக்கத்தில் மெலியோ, இடையோ வந்தால் எதுவும் மிகாது இயல்பாகும்.

பனை+மரம் = பனைமரம்.

கலை+வளம் = கலைவளம்.

## 'ஒ' ஈற்றுப் புணர்ச்சி

'நொ' என்ற ஓர் எழுத்துச் சொல்லைத் தவிர, வேறு 'ஒ' ஈற்றுச் சொற்கள் இல்லை. 'நொ' என்பது வழக்கத்தில் இல்லையாதலின் விட்டு விடுவோம். (நொ = துன்பம்–துன்புறுதல், நோய்–நோயுறல்)

## 'ஓ' ஈற்றுப் புணர்ச்சி

'ஓ' ஈற்றுச் சொல்லும் ஓரிரண்டைத் தவிர மிகுதியாக இல்லை.

### (1) 'போ' என்பதில் இயல்பு

போ+கண்ணே = போ கண்ணே.

### (2) 'இதோ' என்பதிலும் இயல்பு

இதோ+கொடுத்துவிடுகிறேன் = இதோ கொடுத்துவிடுகிறேன்]



### (3) இடைச்சொல்லாகிய ஓ ஈற்றில்

அவன்+ஓ = அவனோ; என்னால்+ஓ = என்னாலோ–என, சில சொற்களின் இறுதியில் 'ஓ' என்னும் தனி இடைச்சொல் சேர்ந்து வருவதுண்டு. அத்தகையவற்றில் இயல்பே நிகழும்.

அவனோ+செய்தான் = அவனோ செய்தான்?

என்னாலோ+முடியும் = என்னாலோ முடியும்?

## 'ஔ' ஈற்றுப் புணர்ச்சி

வழக்கத்தில் 'ஔ' ஈற்றுச் சொற்கள் இல்லையாதலின், இவ்வீற்றையும் விட்டுவிடுவோம்.

### உயிரீற்று முடிவு.

இதுவரையும், உயிரீற்றுப் புணர்ச்சி விதிகளின் இரு பிரிவுகளாகிய உயிர்முன் உயிர்ப் புணர்ச்சியும், உயிர்முன் மெய்ப்புணர்ச்சியும் முறையே கூறப்பட்டன. இனி மெய்யீற்றுப் புணர்ச்சி விதிகட்குச் செல்வோம்.

# 11. மெய்யீற்று விதிகள்

இப் பகுதியில், **ங், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள்** என்னும் (மெல்லினத்துள் ஐந்தும், இடையினம் ஆறும் ஆகப்) பதினொரு மெய்யெழுத்துக்களுள் ஏதேனும் ஒன்றை ஈற்றிலுடைய சொல்லின் பக்கத்தில் மற்றொரு (வரு) மொழிவந்து புணர்வதைப் பற்றி ஆய்வோம். வல்லின மெய்களாகிய **க், ச், ட், த், ப், ற்**- என்னும் ஆறும், மெல்லின மெய்களுள் **'ஞ்'** என்பதும் ஆகிய ஏழும், தமிழில் எந்தச் சொல்லின் இறுதியிலும் வருவதில்லை (அப்படி வந்திருந்தால் அது தமிழ்ச்சொல் லன்று) ஆகலின், அந்த ஏழையும் விட்டு, முதலிற் குறிப்பிடப்பட்டுள்ள பதினொரு மெய்யெழுத்துக்களை மட்டும் ஈண்டு எடுத்துக்கொள்வோம்.

### உயிர்முதல், மெய்ம்முதல்.

உயிரீற்றுப் புணர்ச்சியில் கூறியிருப்பது போலவே, மெய்யீற்றுச் சொல்லின் பக்கத்தில் வரும் வருமொழிகளையும், (அழகு-என்பது போல) உயிர் எழுத்தை முதலில் உடைய 'உயிர் முதல் வருமொழி', (க்+அ-களிப்பு-என்பதுபோல) மெய்யெழுத்தை முதலில் உடைய 'மெய்ம் முதல் வருமொழி' என இரு பிரிவுகளாகப் பிரித்துக்கொள்ள வேண்டும்.



## 1. மெய்ம்முன் உயிர்

எனவே, இங்கு முறையே முதலாவதாக, மெய்யெழுத்தை ஈற்றிலுடைய சொல்லின் பக்கத்தில், உயிரெழுத்தை முதலிலுடைய வருமொழி வந்து புணருமாயின், என்னென்ன மாறுதல் அடையக் கூடும், என்பதை ஆய்வோம். அஃதாவது, மெய்யீற்றின் முன் உயிர்முதல் வருமாறு:—

### (1) உடலோடு உயிர் ஒன்றல்

நம் உடலோடு நம் உயிர் ஒன்றி, வேற்றுமையின்றிக் காணப்படுவதைப் போன்றே, மெய்யீற்று நிலைமொழியின் ஈற்றிலுள்ள மெய்யும், உயிர்முதல் வருமொழியின் முதலிலுள்ள உயிரும் புணரும் போது, இரண்டும் ஒன்றாகி ஓர் எழுத்தாகக் காணப்படும்.

பால் + ஆடை = பா**லா**டை.

மரம் + ஏறினான் = மர**மே**றினான்.

### (2) ஒற்றுக்கெட உடம்படுமெய் தோன்றல்.

உடல்மேல் உயிர் ஒன்றவேண்டும் என்றோம். ஆனால், சிலவிடங்களில் இவ்விதி பொருந்துவதில்லை. மரத்தால் ஆன உரலைக் குறிப்பிடும்போது, மரம் + உரல் = மரமுரல் என்னாமல், மரம் + உரல் = மரவுரல் என்றே கூறுகிறோம். முகத்தினது அழகைக் குறிப்பிடுங்கால், முகம் + அழகு = முகமழகு என்னாமல், முகவழகு என்றே கூறுகிறோம். இதற்குக் காரணம் என்ன?

மரவுரல் என்பது (மரத்தாலான உரல்) மூன்றாம் வேற்றுமைத்தொகை. முகவழகு என்பது (முகத்தினது அழகு) ஆறாம் வேற்றுமை. இவ்வாறு சில வேற்றுமைத் தொகைகளில், நிலைமொழி ஈற்றின் ஒற்றுக்கெட, இடையில் 'வ்' உடம்படுமெய் (60-ஆம் பக்கம் பார்க்க) தோன்றும் என அறிக.

மரம்+உரல்=மர+உரல்=மர+வ்+உரல்= மரவுரல்.

முகம் + அழகு=முக + அழகு=முக + வ் + அழகு=முகவழகு.

இவ்விதம் ஒற்றுக் கெட, உடம்படுமெய் தோன்றுவது 'ம்' ஈற்று நிலைமொழிகளில் மட்டுமே என அறிக.

### (3) தனிக்குறில் முன் ஒற்று இரட்டல்

'படு' என்பதில், ப, டு என இரண்டு குற்றெழுத்துக்கள் உள்ளன. 'படும்' என்பதில், இரண்டு குற்றெழுத்துக்களின் பக்கத்தில் 'ம்' என்னும் மெய் உள்ளது. 'மண்' என்பதில் 'ம' என்னும் தனிக் குற்றெழுத்தின் பக்கத்தில் 'ண்' என்னும் மெய் உள்ளது. இதற்குத்தான் (மண்) 'தனிக்குறில் முன் ஒற்று' என்று சொல்வது. (குறில்=குற்றெழுத்து. ஒற்று = மெய்யெழுத்து.) இந்தத் தனிக்குறில் முன் ஒற்று உடைய, அஃதாவது, ஒரு குறிலும்,



ஒரு மெய்யும் ஆகிய ஈரெழுத்துக்களையுடைய நிலைமொழியின் பக்கத்தில், உயிரை முதலிலுடைய வருமொழி வந்தால், இரண்டிற்கும் இடையே மற்றோர் ஒற்று இரட்டித்து வரும். அஃதாவது, மண் + எடுத்தான் = மண் + ண் + எடுத்தான் என வரும். இவ்விதம் புதிதாக வந்த 'ண்' என்பதும், பக்கத்திலுள்ள 'எ' என்பதும் சேர்ந்து (ண் + எ =) 'ணெ' என்றாகும். ஆகவே,

மண் + எடுத்தான் — மண் + ண் + எடுத்தான் = மண்ணெடுத்தான் என்றாகும். இன்னும்,

பல் + உடைந்தது = பல்லுடைந்தது.

நெய் + ஊற்றினான் = நெய்யூற்றினான் எனப் பலவற்றையும் கண்டுகொள்க.

நிலைமொழியின் முதலில் நெட்டெழுத்தோ, இரு குறில்களோ, மேலும் பலவெழுத்துக்களோ இருப்பின் இவ்விதி பொருந்தாது. தனிக்குறிலும் மெய்யுமாக உள்ள நிலைமொழியிலேயே ஒற்றிரட்டும் என்பதை நன்கு நினைவில் இருத்தல் வேண்டும்.

(குறிப்பு:- BIG + EST = BIG GEST என ஆங்கிலத்தில் கூட, BI எனத் தனி அசையின் (one Syllable) முன் G என்னும் மெய் இருக்க, அதன் பக்கத்தில் EST என E என்னும் உயிர் வர, மற்றொரு G மெய் இரட்டித்திருப்பதை நோக்குக.)

### 2. மெய்ம்முன் மெய்

இனி முறையே இரண்டாவதாக மெய்யீற்று நிலைமொழியின் பக்கத்தில், மெய்யெழுத்தை முதலிலுடைய வருமொழி வந்து புணரும் விதிகளை நோக்குவோம். அஃதாவது, மெய்யீற்றின் முன் மெய்ம்முதல் வருமாறு:-

மெய்ம்முன் மெய் புணர்வதற்கு இலக்கண நூலில் மிக்க விதிகள் கூறப்பட்டிருப்பினும், எழுத்தாளர்களால் பெரும்பாலும் கையாளப்படாத விதிகளை விட்டுவிட்டு, அடிக்கடிக் கையாளப்படும் இன்றியமையாத சில விதிகளை மட்டுமே ஈண்டு எடுத்துக் கொள்வோம்.

## 'ஞ்' ஈற்றுப் புணர்ச்சி

'**உரிஞ்**' (உராய்தல்) என்னும் ஒரு சொல்லைத் தவிர, வேறு '**ஞ்**' ஈற்றுச் சொல் இல்லையாதலின் இதனை விடுப்போம்.

## 'ண்' ஈற்றுப் புணர்ச்சி

### (1) ண் - ட் ஆதலும், இயல்பும்.

'**ண்**' ஈற்றுச் சொல்லின் பக்கத்தில் வல்லின முதல் வருமொழி வந்தால், வேற்றுமையில் '**ண்**' என்பது '**ட்**' எனத் திரியும்; அல்வழியில் திரியாது இயல்பாகவே நிற்கும்.

மண் + குடம் = மட்குடம் (மண்ணாலாகிய குடம்) என மூன்றாம் வேற்றுமையில் '**ட்**' ஆகத் திரிந்தது.



மண் + கடிது = மண்கடிது (அல்வழியில் இயல்பாயிற்று. முதல் வேற்றுமை அல்வழியைச் சேர்ந்தது அல்லவா?)

'**ண்**' ஈறு. மெல்லினமுதல் வருமொழியும் இடையின முதல் வருமொழியும் வந்தால், வேற்றுமை அல்வழி இரண்டிலும் இயல்பாகும்.

### (2) 'ண்'–'உ' பெறுதல்

சிலவிடங்களில் '**ண்**' ஈற்றுச் சொல், இறுதியில் '**உ**' என்னும் எழுத்தைப் பெறும்.

உண் + கந்தா = உண் + உ + கந்தா = உண்ணு கந்தா

## 'ந்' ஈற்றுப் புணர்ச்சி

'**பொருந்**' (பொருந்துதல்), '**வெந்**' (முதுகு) என்பன தவிர, வேறு பெரும்பாலாக 'ந்' ஈற்றுச் சொற்கள் இல்லையாதலின் இதனையும் விடுவோம்.

## 'ம்' ஈற்றுப் புணர்ச்சி

மரம் + பலகை = மரப் பலகை என வருமொழிமுதலில் வல்லினம் வந்தால், '**ம்**' கெட, வலி மிகுவதும்,

மரம் + சிறியது = மரஞ்சிறியது என, வல்லினம் வரின், '**ம்**' என்பது, வந்த வல்லினத்திற்கு ஏற்ற மெல்லினமாகத் திரிவதும்,

மரம் + முனை = மரமுனை; மரம் + வேர் = மரவேர் என, மெலியும், இடையும் வருமொழியில் வந்தால் '**ம்**' கெட்டு நிற்பதும்,

ஆக இடத்திற் கேற்றபடி உள்ள 'ல்' ஈற்றுப் புணர்ச்சி விதிகளை யெல்லாம் உய்த்துணர்க. இவ் வீற்றுப் புணர்ச்சியில், எழுத்தாளர்க்குக் குறிப் பிடத்தக்க ஐயங்கள் அவ்வளவாகத் தோன்றாமல், எளிதாகவே இருத்தலின், ஈண்டு விரிந்த விளக்கம் தரவில்லை.

## 'ன்' ஈற்றுப் புணர்ச்சி

### (1) ன் – ற் எனத் திரிதலும் இயல்பும்.

'ன்' ஈறு, வல்லின வருமொழி வந்தால், வேற்றுமையில் மட்டும் 'ற்' எனத் திரியும். அல்வழியில் திரியாது.

பொன்+குடம்=பொற்குடம் (பொன்னாலான குடம்) வேற்றுமையில் திரிந்தது.

பொன்+சிறந்தது=பொன்சிறந்தது. (அல்வழியில் இயல்பு)

'ன்' ஈறு, வருமொழியில் மெலியோ இடையோ வரின், வேற்றுமை யல்வழி யிரண்டிலுமே இயல்பாம்.

### (2) 'ன்'–'உ' பெறுதல்.

சில்விடங்களில் 'ன்' ஈறு 'உ' பெறும்

தின் + கந்தா = தின் + உ + கந்தா = தின்னு கந்தா.



## ய், ர், ழ் ஈற்றுப் புணர்ச்சிகள்

### இயல்பு

ய், ர், ழ் என்னும் ஈற்று நிலைமொழிகளின் பக்கத்தில், வல்லின முதல் வருமொழிகள் வந்தால், முதல் வேற்றுமையிலும், உம்மைத் தொகையிலும், வினைத்தொகையிலும் இயல்பாகும்.

**முதல் வேற்றுமையில் இயல்பு:**

வேய் + பெரிது = வேய் பெரிது (வேய் = மூங்கில்)

வேர் + சிறிது = வேர் சிறிது.

யாழ் + சிறந்தது = யாழ் சிறந்தது.

**உம்மைத் தொகையில் இயல்பு:**

பேய் + பூதம் = பேய்பூதம் (பேயும் பூதமும்)

நீர் + கனல் = நீர்கனல் (நீரும் நெருப்பும்)

இகழ் + புகழ் = இகழ் புகழ் (இகழும் புகழும்)

**வினைத் தொகையில் இயல்பு:**

செய் + பொருள் = செய் பொருள் (செய்த பொருள்.)

தேர் + குதிரை = தேர் குதிரை (தேர்ந்த குதிரை)

வீழ் + புனல் = வீழ் புனல் (வீழும் தண்ணீர்)

### மிகல்

ய், ர், ழ் ஈற்றின் முன் வலி வந்தால், இருபெயரொட்டுப் பண்புத் தொகையிலும், உவமைத் தொகையிலும் வலி மிகும்.

### இ. பெ ஒ. ப. தொகையில் மிகல்:

தாய்+பெண் = தாய்ப்பெண் (தாயாகிய பெண்)
கார்+பருவம் = கார்ப்பருவம் (கார்-ஒரு பருவம்)
பூழ் + பறவை = பூழ்ப்பறவை (பூழ் — ஒருவித பறவை)

### உவமைத் தொகையில் மிகல்:

வேய் + தோள் = வேய்த்தோள் (மூங்கில் போன்ற தோள்.)

கார் + குழல் = கார்க்குழல் (மேகம் போன்ற கரிய கூந்தல்)

காழ்+தோள் = காழ்த்தோள் (தூண் போன்ற தோள்.)

### வேற்றுமையில் மிகல்:

ய், ர், ழ் என்னும் ஈற்றில், வேற்றுமைப் புணர்ச்சியில் வலி வந்தால் மிகும்:

| | |
|---|---|
| நாய்+காது=நாய்க்காது<br>தேர்+தட்டு=தேர்த்தட்டு<br>பூழ்+கால்=பூழ்க்கால் | ஆறும் வேற்றுமையில் மிகல். |

### ஆய், போய், கூய் என்பவற்றில் மிகல்:

மேலுள்ள மூன்றிலும் வலி வந்தால் மிகும்:
வீண் ஆய்+போயிற்று = வீணாய்ப்போயிற்று.
போய்+சேர்ந்தான் = போய்ச்சேர்ந்தான்.
கூய் + கத்தினான் = கூய்க்கத்தினான். (கூய் = கூவி)



### 'ய்' முன் மெலி மிகல்

மெய், பொய் முதலிய தனிக் குற்றெழுத்தின் பக்கத்தில் 'ய்' வந்துள்ள 'ய்' ஈற்றுச்சொற்களின் பக்கத்தில், மெல்லின முதல் வருமொழி வரின், இடையே மெல்லின ஒற்று மிகவேண்டும்.

மெய் + ஞானம் = மெய்ஞ்ஞானம்.

மெய் + மறை = மெய்ம்மறை.

மெய்ம்மை, பொய்ம்மை என்று சொல்வதே சரி. மெய்மை, பொய்மை என்பன தவறு.

### 'கீழ்' என்பதில் மிகல்–மிகாமை

'கீழ்' என்னும் சொல்லில் வலி மிக்கும் வரலாம், மிகாமலும் வரலாம்:

கீழ்+குலம் = கீழ் குலம் (அல்லது) கீழ்க்குலம்

## 'வ்' ஈற்றுப் புணர்ச்சி

அவ் (அவை,) இவ் (இவை,) தெவ் (பகை)- என்பன தவிர, வேறு மிகுதியாக 'வ்' ஈற்றுச் சொற்கள் இல்லையாதலின் விட்டுவிடுவோம்.

## ல், ள் - ஈற்றுப் புணர்ச்சி

### ல், ள் – 'உ' பெறுதல்

சில விடங்களில் ல், ள் ஈறுகள் 'உ' பெறும்:

சொல் + கண்ணே = சொல் + உ + கண்ணே = சொல்லு கண்ணே

கொள் + கண்ணு = கொள் + உ + கண்ணு = கொள்ளு கண்ணு

### ல், ள் – ற், ட் ஆகத் திரிதல்

வேற்றுமையில் வல்லினமுதல் வருமொழி வந்தால் ல்–ற் எனவும் ள்–ட் எனவும் திரியும்.

கல் + சட்டி = கற்சட்டி (ல் – ற்)

முள் + புதர் = முட்புதர் (ள் – ட்)

இக்கால எழுத்தாளர்கள், ல், ள் ஈற்றுச் சொற்களை, படிப்போர்க்கு நன்கு புரிவதற்காகப் பெரும்பாலும் திரிக்காமல் இயற்கையாகவே எழுதுகின்றார்கள் ஆதலின், இப் புணர்ச்சிகளில் மிகுதியாக ஐயப் போராட்டங்கள் நிகழ்வதில்லை. எனவே, நாமும் இவற்றை மேலும் விரிக்காமல் விட்டுவிடுவோம்.

அஃதாவது மண்+தோண்டி=மட்டோண்டி; பொன்+தாமரை = பொற்றாமரை; புண் + நீர் = புண்ணீர்; பொன் + நாள் = பொன்னாள்; கல் + தூண் = கற்றூண்; முள் + தாழை = முட்டாழை; பல் + நாற்றம் = பன்னாற்றம்; கள் + நாற்றம் = கண்ணாற்றம் என, ல்–ற், ன் ஆகவும், ள்–ட், ண் ஆகவும், வருமொழி முதலிலுள்ள த்–ட், ற் ஆகவும், ந்–ண், ன் ஆகவும், இன்னும் பலவிதமாகவும் வருவனவற்றையெல்லாம் உய்த்துணர்க.



### மெய்யீற்றில் ஒரு பொது விதி

மெய்யெழுத்துக்கள் பதினெட்டனுள், ய், ர், ழ் என்னும் மூன்றும் தவிர, மற்றைய பதினைந்து மெய் யெழுத்துக்களின் பக்கத்தில் வேறொரு மெய் யெழுத்து எப்போதும் எங்கும் இணைந்து வரக் கூடாது. எனவே, கற்கண்டு என்பதை–கற்க்கண்டு, கல்க்கண்டு எனவும். நட்பு என்பதை-நட்ப்பு எனவும், ஆட்சி என்பதை–ஆட்ச்சி எனவும், புத்தகம் என்பதை–புஸ்த்தகம் எனவும், இன்னும் இவ்வாறெல்லாமும் எழுதுதல் மிகவும் தவறாகும்.

மெய்யீற்றுப் புணர்ச்சியை ஒருவாறு இம் மட்டில் நிறுத்திக் கொள்வோம்.

## மிகும் இடமும் மிகா இடமும்

இதுவரையும் புணர்ச்சிகளுள் மிகும் இடங்களையும் மிகா இடங்களையும் ஒருவாறு விரிவாக ஆராய்ந்தோம். இனி மாணவர் நலங் கருதி, அவற்றைச் சிறிது சுருக்கித் தொகுத்துப் பார்ப்போம்.

### 1. மிகும் இடங்கள்

மிகும் இடங்களுள், அடிக்கடி நம் பயிற்சியில் வரும் இன்றியமையாத சிலமட்டும் இங்கே தரப் படும். அவற்றின் விளக்கங்களும் எடுத்துக்காட்டுகளும் முன்னமே கொடுக்கப்பட்டிருத்தலின், ஈண்டு அவை கொடுக்கப்பட்டுள்ள பக்கங்கள் மட்டும் குறிப்பிடப்படும். ஆண்டு விரிவாகக் கண்டு கொள்க.

**'செய'** என்னும் வாய்பாட்டு வினையெச்சத்திலும், ஆக, மிக என்பவற்றிலும் மிகும். (ப. 68)

**'அ'** சுட்டு, அந்த, இந்த, எந்த - மிகும். (ப. 70)

**'ஆ'** ஈற்று மரப்பெயரில் மிகும். (ப. 75)

**'இ'** சுட்டு மிகும். (ப. 76)

**'இ'** ஈற்று வினையெச்சம், அன்றி, இன்றி, புளி- மிகும். (ப. 77)

**'இ'** ஈற்று இருபெயர் ஒட்டுப் பண்புத்தொகையிலும் உவமைத்தொகையிலும் மிகும். (ப. 78)

க்கு, ச்சு, ட்டு, த்து, ப்பு, ற்று-என்னும் இரட்டை எழுத்துக்களில் முடியும் வன்றொடர்க் குற்றியலுகரங்களில் மிகும். (ப. 84)

வன்றொடர்க்குற்றியலுகரமாக உள்ள **'செய்து'** என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தில் மிகும். (செடியை) நட்டு+பார்த்தேன்=நட்டுப்பார்த்தேன்; செத்து + பிழைத்தான் = செத்துப் பிழைத்தான்; கற்று + கொண்டான் = கற்றுக்கொண்டான்.

அங்கு, இங்கு, உங்கு, எங்கு, ஆங்கு, ஈங்கு, ஊங்கு, யாங்கு-என்னும் மென்றொடர்க் குற்றியலுகரங்களில் மிகும் (ப.84, 85)

**'ஐ'** யாக மாறும் மென்றொடரில் மிகும். (ப. 85)

இரட்டிக்கும் நெடில், உயிர்த் தொடர்களில் மிகும். (ப. 86, 87)

**'எ'** வினாவில் மிகும். (ப. 88)



**'ஐ'** ஈற்று இருபெயரொட்டுப் பண்புத்தொகையிலும் உவமைத்தொகையிலும் மிகும். (ப. 90)

ஐ, கு என்னும் (2, 4-ஆம்) வேற்றுமை உருபுகள் வெளிப்படையாக விரிந்து வரின் மிகும். (அவன்+ஐ=) அவனை + கண்டேன் = அவனைக் கண்டேன். (அவன்+கு=) அவனுக்கு + கொடுத்தேன்=அவனுக்குக் கொடுத்தேன்.

**'ய்'** ஈற்று வினையெச்சங்களில் (ஆய், போய்) மிகும். (ப. 102)

**ய், ர், ழ்** ஈற்று இருபெயரொட்டுப் பண்புத்தொகையிலும் உவமைத் தொகையிலும் மிகும். (ப. 101-102)

## 2 மிகா இடங்கள்

மிகா இடங்களுள், அடிக்கடி நம் பயிற்சியில் வரும் இன்றியமையாத சில மட்டும் (பழைய பக்கங்களுடன்) இங்கே தரப்படும்

(ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமுட்பட) எந்தப் பெயரெச்சத்திலும் மிகாது. (ப. 68, 69)

வாழிய, வாழ்க-மிகாது. (ப. 71)

உடைய, பிற, மற்றைய, முதலிய-மிகா. (ப. 72)

**'ஆ'** ஈற்று வினா-விளிகளில் மிகாது. (ப. 74)

**'இ'** ஈற்று வினைத்தொகையில் மிகாது. (ப. 77)

ஒடு, ஓடு. அது என்னும் வேற்றுமை யுருபுகளில் மிகாது. (ப. 81)

**அது, இது, உது, எது** - என்னும் சுட்டு, வினைப் பெயர்களில் மிகாது. (ப. 82)

(எட்டு. பத்து, தவிர) எண்ணுப் பெயர்களில் மிகாது. (ப. 82, 83)

ண்டு, ந்து, ன்று—என மென்றொடர்க் குற்றிய லுகரமாக முடியும் (கண்டு, வந்து, சென்று) **'செய்து'** என்னும் வாய்பாட்டு வினையெச்சங்களிலும், ய்து (கொய்து) என இடைத்தொடராக முடியும் **'செய்து'** வாய்பாட்டு வினையெச்சங்களிலும் மிகாது.

கண்டு+சென்றான் = கண்டு சென்றான்
வந்து+படித்தான் = வந்து படித்தான்
சென்று+கண்டான் = சென்று கண்டான்
செய்து+பார்த்தான் = செய்து பார்த்தான்

அன்று, இன்று, என்று, பண்டு, முந்து, மிகாது. (ப. 85)

**'உ'** ஈற்று வினைத் தொகையில் மிகாது. (ப. 81, 82)

இடைச்சொல் **'ஏ'** ஈற்றில் மிகாது. (ப. 89)
**'ஐ'** ஈற்று வினைத்தொகையில் மிகாது. (ப. 90)
இடைச்சொல் **'ஓ'** ஈற்றில் மிகாது. (ப. 93)

**ய், ர், ழ்** என்பன தவிர, வேறு எந்த மெய் யெழுத்தின் பின்னும் மற்றொரு மெய்யெழுத்தை மிகுக்கக்கூடாது. (ப. 105)



## முடிவு

இந்நூலில் கூறப்பட்டுள்ளவாறு, இலக்கணக் குறிப்புக்களை நன்கு கற்றுத் தெளிந்து, புணர்ச்சி விதிகளைப் பின்பற்றி எழுத்தாளர்கள் எழுதத் தொடங்கின், தமிழ் நடை நன்கு செழிக்கும்.

இன்னும், சொற் குற்றம் – சொற்றொடர்க் குற்றம் வராமல் எழுதல், கட்டுரை-கடிதம்-மொழி பெயர்ப்பு எழுதல் முதலியவற்றை, அடுத்துவரும் பகுதிகளில் விரிவாகக் கண்டு கொள்ளலாம்.

**முதல் பாகம் முற்றிற்று.**

# பிற்சேர்க்கை

மேலே, பிழையின்றி எழுதுதற்கு உறுதுணை புரியும் பல இலக்கணக் குறிப்புகள் தரப்பட்டுள்ளன. ஆண்டு விடுபட்டனவற்றுள் சில இலக்கணக் குறிப்புகள் மாணவர் தெரிந்து பயன் பெறுதற்காக ஈண்டு விளக்கப்படும். அவையாவன:-

## 1. பண்புத் தொகை

வாழைப் பழம், சாரைப் பாம்பு என்பன போல, ஒரேபொருளைக் குறிக்கும் இரண்டு பெயர்ச் சொற்கள் ஒட்டியிருக்க, இடையிலே **'ஆகிய'** என்னும் சொல் தொக்கு வருதற்கு **'இரு பெயரொட்டுப் பண்புத் தொகை'** என்பது பெயர், என முன்னர் (ப. 48, 49) அறிந்துள்ளோம்.

இனி, - ஒரு பண்புப் பெயர் முன்னும், அதனையுடைய பொருளின் பெயர் பின்னுமாக இரண்டு பெயர்கள் இணைந்திருக்க, இடையிலே **'ஆகிய'** என்னும் பண்புருபு தொக்கு வருவதற்கு **'பண்புத் தொகை'** என்பது பெயர்.

செந்தாமரை, நல்வினை என்னும் எடுத்துக் காட்டுக்களை நோக்குவோம்:

செம்மை+தாமரை=செம்மையாகியதாமரை, நன்மை + வினை = நன்மையாகிய வினை - என வர வேண்டியவைகள், **'மை'** என்பதும் **'ஆகிய'** என்பதும் தொக்கு நிற்க, செந்தாமரை, நல்வினை என்று ஆயின. இவை போல்வன **'பண்புத் தொகை'** எனப்படும்.

**'வாழைப் பழம்'** என்னும் இரு பெயரொட்டுப் பண்புத் தொகையில், பழத்திற்கு வாழை என்ற பெயரும் உரியது. ஆனால், **'செந்தாமரை'** என்னும் பண்புத் தொகையில், தாமரைக்குச் செம்மை என்ற மற்றொரு பெயர் கிடையாது. தாமரையானது, செம்மை நிறத்தை உடையது. நல்வினை என்பதில், வினையானது, நல்ல தன்மையை உடையது. எனவே, செம்மை, வெண்மை முதலிய நிறப்பண்புப் பெயர்கள், சிறுமை, பெருமை முதலிய வடிவுப்பண்புப் பெயர்கள், நன்மை, தீமை முதலிய தன்மைப்பண்புப் பெயர்கள், இன்னும் இவை போல்வனவற்றுள் ஏதேனும் ஒன்று முன்னும், அதனையுடைய பெயர் பின்னும் நிற்க, இடையிலே **'மை'**, **'ஆகிய'** என்பன தொக்கு வரின், **'பண்புத் தொகை'** என அறிக.

இரு பெயரொட்டுப் பண்புத் தொகைக்கும், வெறும் பண்புத் தொகைக்கும் உள்ள வேற்றுமையை உய்த்துணர்க.

## 2. அன்மொழித் தொகை

நாம் முன்பே வேற்றுமைத் தொகை வினைத் தொகை, பண்புத் தொகை, உவமைத் தொகை உம்மைத் தொகை என்னும் ஐந்து தொகைகளைப் பற்றி அறிந்துள்ளோம் அல்லவா?

இந்த ஐந்து தொகைகள் அமைந்த சொற்றொடர்களுக்குப் பின், அவையல்லாத வேறு

மொழிகள் தொக்கு (மறைந்து) இருப்பின், அத் தொடர்கள் **'அன்மொழித்தொகை'** எனப்படும். எனவே, அன்மொழித்தொகை ஐந்து வகைப்படும் என்பது புலனாகும். அன் மொழி = அல்மொழி = அல்லாத மொழி = அவையல்லாத வேறு மொழி தொக்கு வருவது, அன்மொழித் தொகையாகும்.

(1) பொற்றொடி (பொன் தொடி)=பொன்னால் ஆன வளையல். இங்கே மூன்றாம் வேற்றுமை **'ஆல்'** உருபு தொக்கிருப்பதால், இது மூன்றாம் வேற்றுமைத்தொகை. **'பொற்றொடி வந்தாள்'** என்பதில், பொற்றொடியுடைய **'பெண்'** வந்தாள் என, **'பெண்'** என்னும் சொல் தொக்குள்ளது. இது (மூன்றாம்) **'வேற்றுமைத்தொகைப் புறத்துப் = பிறந்த அன்மொழித் தொகை'** எனப்படும். (புறத்துப் பிறந்த = பின்னே யமைந்த).

(2) தாழ் குழல் == தாழ்ந்த (நீண்டு தொங்குகிற) கூந்தல். இது வினைத்தொகை. **'தாழ் குழல் வந்தாள்'** என்னுமிடத்து, தாழ்குழலையுடைய **'மங்கை'** வந்தாள் என, **'மங்கை'** என்பது தொக்கிருத்தலின், இது **'வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை'** எனப்படும்.

(3) கருங் குழல் == கருமையான கூந்தல். இது பண்புத்தொகை. **'கருங்குழல்வந்தாள்'** என்னுமிடத்து, கருங்குழலையுடைய **'நங்கை'** வந்தாள் என, **'நங்கை'** தொக்கிருத்தலின், இது **'பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை'** எனப்படும்.



(4) தேன் மொழி == தேன் போன்ற மொழி. இது உவமைத்தொகை. **'தேன்மொழி வந்தாள்'** என்னுமிடத்து, தேன்மொழியை யுடைய **'பெண்'** வந்தாள் என, **'பெண்'** தொக்கிருத்தலின், இது **'உவமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை'** எனப்படும்.

(5) இஞ்சி புதினா=இஞ்சியும் புதினாக்கீரையும். இது உம்மைத்தொகை. **'இஞ்சி புதினா சாப்பிட்டேன்'** என்னுமிடத்து, இஞ்சியும் புதினாக்கீரையும் கலந்த **'துவையல்'** சாப்பிட்டேன் என, **'துவையல்'** என்னும் சொல் தொக்கிருத்தலின், இது **'உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை'** எனப்படும்.

எனவே, அன்மொழித்தொகை ஐந்து வகைப் படுவதறிக.

### 3. உயிர் அளபெடை

எங்கோ சில செய்யுட்களுள் சில அடிகளில் போதுமான ஓசை யில்லாமல் குறைந்து நிற்பதுண்டு. ஓசை குறைந்த அடியின் ஒரு சொல்லில் உள்ள ஒருநெட்டெழுத்தின்பின், அதற்கு இனமான ஒரு குற்றெழுத்தைச் சேர்த்துப் படித்தால், ஓசையின் அளவு ஒரு சிறிது மிகுதிப்படுமல்லவா ?

**'விடாஅ தோரிவள் விடப்பட் டோரே'** என்பது ஒரு செய்யுளடி. இங்கே, **'விடாதோர்'** என்னும் சொல்லில், **'டா'** என்னும் நெட்டெழுத்தின் பின், **'அ'** என்னுங்குறிலைச்சேர்த்து, **'விடாஅதோர்'** என எழுதியிருப்பதைக் காண்க உண்மையில் **'விடாதோர்'**

என்பதுதான் இயற்கையான சொல். இதில் 'அ' என்பதைச் சேர்த்ததால் பொருள் மாறுபாடு ஒன்றும் இல்லை. ஆயினும், படிக்கும்போது ஓசையைச் சிறிது நீட்டிப்படிக்கவேண்டும். அவ்விதம் படித்தால் பாட்டிற்கு வேண்டிய ஓசை சரியாய் விடுகிறது.

இங்கே, 'டா' (ட்+ஆ) என்பதில் 'ஆ' வுக்கு இரண்டு மாத்திரை ஓசை யல்லவா? அதன் பின் சேர்ந்துள்ள 'அ' வுக்கு ஒரு மாத்திரை யல்லவா? இங்கே இரண்டு மாத்திரை தந்து 'டா' என ஒலிப்பதற்குப் பதில், மூன்று மாத்திரை தந்து 'டாஅ' என நீட்டி ஒலிக்கிறோம். அஃதாவது, உயிர் எழுத்தின் ஓசையின் அளவைச் சிறிது மிகுதியாக எடுத்து ஒலிக்கின்றோம். இதற்குத்தான் 'உயிர் அளபெடை' என்பது பெயர். (உயிர் அளபு எடை = உயிர் அளவு எடுத்தல் = உயிர் எழுத்தின் ஓசை யளவை எடுத்து (நீட்டி) ஒலித்தல்.

சில விடங்களில், போதுமான ஓசையிருந்தும், மேலும் இனிய இசை யின்பத்திற்காக, குற்றெழுத்தை நெட்டெழுத்தாக நீட்டி, பக்கத்தில் மற்றொரு குறில் சேர்த்துக் கூறுவதும் உண்டு.

**'கெடுப்பதூஉம்'** என்று தொடங்கும் திருக்குறளில் போதுமான ஓசையுள்ளது. இருப்பினும், திருவள்ளுவர், இனிய இசை யின்பத்திற்காக, **'கெடுப்பதும்'** என்னும் சொல்லில் உள்ள 'து' வை,



'தூ' என நீட்டி, பக்கத்தில் 'உ' குறில் சேர்த்து, **'கெடுப்பதூஉம்'** என எழுதியுள்ளார். இவ்வாறு, இனிய இசை யின்பத்திற்காக அளபெடுப்பதற்கு, **'இன்னிசை யளபெடை'** என்பது பெயர்.

சில விடங்களில், வினையெச்சம் அல்லாத ஒரு சொல்லை, வினையெச்சப் பொருள் தரும்படி அள பெடுக்கச் செய்வதும் உண்டு. **'நசை'** என்பது ஒரு பெயர்ச்சொல். நசை = விருப்பம். இதனை, **'நசைஇ'** என அளபெடுக்கச் செய்யின், **'விரும்பி'** என வினை யெச்சப் பொருள்படும். (நசைஇ = விரும்பி.) இவ்வாறு புதிய சொல் உருவாகும்படி அள பெடுப்பதற்கு, **'சொல்லிசை யளபெடை'** என்பது பெயர். இன்னும், உறீஇ (உற்று), உடீஇ (உடுத்தி) முதலிய சொற்களையும் காண்க.

செய்யுளில் ஓசை குறைவதையும், குறையாமையையும் கண்டு பிடிப்பதற்குச் செய்யுளிலக்கணம் கற்க. அல்லது ஓர் ஆசிரியரை நாடுக.

### 4. ஒற்றளபெடை

ஒற்று = மெய்யெழுத்து. **'பங்கு'** என்பதில் **'பங்ங்கு'** என, 'ங்' என்னும் மெய்யெழுத்தும், மற்றொரு 'ங்' பெற்று அளபெடுப்பதுண்டு. இதற்குத்தான் **'ஒற்று அளபெடை'** என்பது பெயர். மற்றைய ஒற்றுக்களையும் இவ்விதம் காண்க.

### 5 அடுக்குத் தொடர்

பாம்பு பாம்பு, ஆ ஆ, நன்று நன்று, - என்பன போல, ஒரு சொல்லே தொடர்ந்து அடுக்கி

வருவதற்கு **'அடுக்குத்தொடர்'** என்பதுபெயர். பாம்பு என ஒரு முறை மட்டும் சொன்னாலும் போதும்; குறித்த பொருளைக் கொடுத்துவிடும். இருப்பினும், அச்சத்திலும், வியப்பிலும், மகிழ்ச்சியிலும், இன்னும் இவை போன்ற பிறவற்றிலும் இவ்வாறு அடுக்குவது இயற்கையன்றோ?

### 6. இரட்டைக் கிளவி

தண்ணீர் **'சலசல'** என்றோடுகிறது.

தீ **'படபட'** என்று வெடித்து எரிகிறது.

**'சலசல, படபட'** என்பன போல, இரட்டை இரட்டையாக இணைந்து வருவன **'இரட்டைக் கிளவி'** எனப்படும். (கிளவி = சொல்).

மேலே, **'பாம்பு பாம்பு'** என்னும் அடுக்குத் தொடரில், **'பாம்பு'** என ஒரு = முறை மட்டும் சொன்னாலுமே குறித்தபொருளைத்தரும் என்றோம். ஆனால், இரட்டைக்கிளவி அப்படியன்று. **'சல'** அல்லது **'பட'** என ஒரு முறை மட்டும் சொன்னால் பொருள் பொருந்தாது. **'சலசல', 'படபட'** என இரட்டையாக இருமுறை சொன்னாலேயே பொருந்தும். இவ்வேற்றுமையை மனத்தில் கொண்டு, அடுக்குத்தொடரையும், இரட்டைக் கிளவியையும் பாகுபாடு செய்துணர்க.

### 7. ஒரு பொருள் பன்மொழி

சில விடங்களில், ஒரே பொருளைத்தரும் பல சொற்கள் அழகுக்காகச் சேர்ந்து வருவதுண்டு. அதற்கு **'ஒரு பொருள் பன்மொழி'** என்பது பெயர்.



உச்சி **மீ மிசை** = உச்சியின் மேல்.

**நாகு இளங்** கன்று = இளைய கன்று.

**'மீ'** என்பதற்கும் **'மிசை'** என்பதற்கும் **'மேல்'** என்பதே பொருள். **'நாகு'** என்பதற்கும் **'இளம்'** என்பதற்கும் **'இளைய'** என்பதே பொருள். இருப்பினும், ஒரேபொருளில் பலசொற்கள்வந்துள்ளமை காண்க.

விரிவஞ்சி. இலக்கணக் குறிப்புக்களை இம்மட்டில் நிறுத்திக்கொள்ளலாம்.

**பிற்சேர்க்கை முற்றிற்று.**

**'எழுத்தாளர் துணைவன்' முதல் பாகம் முற்றிற்று**